# نواقض الإسلام

جمع وإعداد

محمد منصور مصطفى



# இஸ்லாத்தை அழிப்பவை

தொகுப்பு

முஹம்மத் மன்சூர் முஸ்தபா

التاميلية

سلطانة
Sultanah

# نواقض الإسلام

جمع وإعداد / محمد منصور مصطفى

# இஸ்லாத்தை அழிப்பவை

தொகுப்பு : முஹம்மத் மன்சூர் முஸ்தபா
இஸ்லாமிய அழைப்பு மையம்(ICC)
தம்மாம்.

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالدمام
**ISLAMIC CULTURAL CENTER (ICC)**
P.O. Box 3865 Dammam KSA 31418
Tel: +966 3 8320004 (228) Fax: 8320005

بسم الله الرحمن الرحيم

بسم الله الرحمن الرحيم .

إن الحمد لله نستعينه ونستغفرة ، ونعوذ بالله من شرور أنفسنا ، من يهده الله فلا مضل له ، ومن يضلل فلا هادي له ، واشهد أن لا إله الا الله ، واشهد أن محمداً عبده ورسوله .

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகுக, இறைவனின் தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களைப் பின்பற்றி வாழும் அனைவருக்கும் இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக.

இவ்வுலகில் ஒரு மனிதன் சொந்தமாக்கும் சொத்துக்களில் மிகப் பெறுமதியானதும், விலை மதிக்கமுடியாததும் அவனது ஈமானாகும். அதை இழப்பவன், அல்லது பறிகொடுப்பவன் அதற்கு நிகராக எதைக் கொடுத்தும் மறுமையில் அவனது நஷ்டத்தை ஈடு செய்யமுடியாது. எனவேதான் வல்ல நாயன் திருமறையில் குறிப்பிடும் போது:

*﴾"நிச்சயமாக, நிராகரிப்போர்கள் அவர்களிடம் இப்பூமியிலுள்ள அனைத்தும், இன்னும் அதனுடன் அது போன்றதும் இருந்து, அவற்றை மறுமையின் வேதனைக்குப் பகரமாக அவர்கள் இழப்பீடாகக் கொடுத்தாலும், அவர்களிடமிருந்து அவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலும் அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு." ﴿* **(5:36)**

எனவே விசுவாசிகள் ஈமானைப் பாதிக்கும் அனைத்தையும் விளங்கி, அதிலிருந்து முழுமையாக நீங்கியிருப்பது அவசியமாகும். நாம் முஸ்லிம்களாகி விட்டோம்,எனவே விரும்பியதை செய்யமுடியும் என்பது நாம் நம்மை ஏமாற்றும் அர்த்தமற்ற பேச்சாகும். மாறாக எத்தனையோ மக்கள் நாம் முஸ்லீம்கள் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் ஈமானை இழந்தவர்களாகவே நடமாடுகின்றனர். இதற்குக் காரணம் மார்க்கம் பற்றியும், மார்க்கத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றியும் போதிய தெளிவின்மையே ஆகும். இன்று எம்மில் அநேகர் வணக்கம் பற்றியும், அதன் சிறப்புக்கள் பற்றியும் தாராளமாகத் தெரிந்திருக்கின்றனர். இதுவும் வரவேற்கத்தக்க விடயம்தான், ஆனால் இப்படிப் பட்டவர்கள் அடிப்படை அம்சங்கள் பற்றியும், அதன் விபரங்கள் பற்றியும் வினவப்பட்டால் போதிய தெளிவின்றிக் காணப்படுவதே கவலைக்குரிய விடயமாகும்.

எனவேதான் அல்குர்ஆன் பெரும் பகுதியினரை சுட்டிக்காட்டி, அவர்கள் ஈமானுடன் அதைப் போக்கும் காரியங்களையும் புரிகின்றனர் எனக் குறிப்பிடுகின்றது.

அல்லாஹு தஆலா திருமறையில் குறிப்பிடும் போது:

*﴾மேலும் அவர்கள் இணைவைப்பர்களாக இருக்கிற நிலையில்லாமல் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதில்லை. ﴿* *(12:106)*

எனவேதான் இச்சிறிய நூலில் இஸ்லாத்திலிருந்து வெளியேற்றும் பல நூற்றுக்கணக்கானவற்றில் மிக மிக முக்கியமானதென அறிஞர்களால் கருதப்படும் பத்து அம்சங்களைத் தெரிவுசெய்து அல்குர்ஆன், அல் ஹதீதின் நிழலில் சிறு விளக்கக் குறிப்புக்களுடன் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர முயல்கிறேன்.

இந் நூலில் முடிந்தவரை சரயான, ஏற்கத்தக்க தகவல்கள், ஆதாரபூர்வமான நபிமொழிகளையே குறிப்பிட முயல்கிறேன். எனினும் மனிதமுயற்சிகள் அனைத்தும் குறையுள்ளதே! படைத்தவன் மாத்திரமே குறையற்றவன் என்ற வகையில் இந் நூலில் வாசகர்கள் தவறாகக் கருதும் கருத்துக்களை உரிய முறையில் சுட்டிக்காட்டும் உரிமை அவர்களுக்குண்டு எனவும் தெரிவிக்கிறேன்.

மேலும் இந்நூலை இறுதிவரை தொகுத்தளிப்பதற்குத் துணைபுரிந்த வல்ல அல்லாஹு தஆலாவுக்கே எல்லாப்புகழும். அவனே எம்மை இறுதிவரை நேர்வழியில் செலுத்துவதற்குப் போதுமானவன்.

இஸ்லாமிய கலாச்சார மையம்.
சவூதி அரேபியா.
தம்மாம்.

முதலில் இஸ்லாத்தை அழிப்பவை எனும்போது ஈமான் இதனுடன் சம்பந்தப்படாதா? அல்லது ஈமான் பறிக்கப்படாதா? என சந்தேகம் எழலாம். ஆகவே முதலில் இது பற்றிய தெளிவை இங்கு காண்போம்.

அதாவது இஸ்லாம், ஈமான் இரண்டுக்குமிடையில் வித்தியாசம் யாதெனில், ஈமான் என்பது ஆறு நம்பிக்கை சார்ந்த அம்சங்களைக் கொண்டதாகவும், இஸ்லாம் என்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் போன்ற வெளிரங்கமான செயல்கள் சம்பந்த மானதைக் குறிக்கக் கூடியதாகவுமுள்ளது.

ஆனாலும் அல்குர்ஆன், அல்ஹதீஸின் நிழலில் பார்க்கும் போது இஸ்லாம் என தனித்துக் கூறப்படும் போது அது ஈமானையும், ஈமான் எனத் தனித்துக் குறிப்பிடப்படும் போது அது இஸ்லாத்தையும் சேர்த்தே கணிக்கப்படும். அந்த வகையில் இஸ்லாத்தைப் அழிப்பவை எனும்போது அது ஈமானையும் சேர்த்தே கணிக்கப்படுகிறது என விளங்கவேண்டும்.

இஸ்லாத்தைப் போக்குபவை என்றால் அது நம்பிக்கை சார்ந்ததாகவோ, அல்லது சொல்லாகவோ, அல்லது செயலாகவோ இருக்கலாம். எல்லாவற்றையும் உள்ள டக்கியதாகவே பின் வரும் அம்சங்கள் உள்ளன.

***அவற்றில் முதலாவது.***

1 -*இணை வைத்தல்.*

**அதாவது அல்லாஹ்வுக்கென செலுத்தப்பட வேண்டிய வணக்கங்களில் எதையேனும் அவன் அல்லாத எவருக்காவது செலுத்தல்.**

**இது பற்றித் திருமறை இவ்வாறு இயம்புகிறது:**

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ۚ وَمَن يُشْرِكْ بِٱللَّهِ فَقَدْ ضَلَّ ضَلَٰلًۢا بَعِيدًا ﴿١١٦﴾ ﴾

***﴿ நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான். இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான். எவன் ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான். ﴾ (4:116)***

**பிறிதொரு இடத்தில்:**

﴿ إِنَّهُۥ مَن يُشْرِكْ بِٱللَّهِ فَقَدْ حَرَّمَ ٱللَّهُ عَلَيْهِ ٱلْجَنَّةَ وَمَأْوَىٰهُ ٱلنَّارُ ۖ وَمَا لِلظَّٰلِمِينَ مِنْ أَنصَارٍ ﴿٧٢﴾ ﴾

***﴿ எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம்***

*நரகமேயாகும். அக்கிரமக்காரர்களுக்கு உதவியுரியவர் எவருமில்லை.* ﴾ (5:72)

எடுத்துக்காட்டாக பிரார்த்தித்தல், இறைஞ்சுதல், உதவிதேடல், அறுத்துப் பலியிடல், நேர்ச்சை செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்டவற்றில் எவையேனும் அல்லாஹ் அல்லாத எவருக்கும் செலுத்துவது இணை வைத்தலாக மாறிவிடும்.

எம்மில் சிலர் இணைவைப்பைப் பொறுத்த வரைக்கும் அது சிலைகளுக்கு ஸுஜூது செய்வது மாத்திரமே என நினைக்கின்றனர். ஆனால் வணக்கம் என்பது சுஜூது செய்வதோடு மாத்திரம் சுருங்கியதும் அல்ல. அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவதென்பது சிலைகளோடு மாத்திரம் சுருங்கியதுமல்ல என்பதை நாம் அனைவரும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறுகையில் பிரார்த்தனையும் வணக்கமெனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவேதான், எவராவது அல்லாஹ் அல்லாத வரிடத்தில் அவரால் முடியாத ஒரு விடயத்தை வேண்டினால், அல்லது அவர் மறைவாக இருக்கும் வேளையில் அழைத்தால், அல்லது பிரார்த்தித்தால் அவர் இணைவைப்பில் வீழ்ந்துவிட்டார். இவ்வாறே

மேற்கூறப்பட்ட வணக்க வகைகள் அனைத்தும் நோக்கப்படும்.

மாறாக ஒருவர் மற்றவரிடத்தில் அவரால் முடியுமான ஒன்றினை அவர் நேரில் உயிருடன் இருக்கும் போது கேட்பதில் எவ்வித தவறும் கிடையாது. ஏனெனில் சிலர் இவ்விரண்டின் வித்தியாசத்தினைப் புரியாமல் எதையும் யாரிடமும் எந் நிலையிலும் எவ்வித வரையறையின்றி வேண்டலாம் என்பதை நியாயப்படுத்துகின்றனர்.

நீரில் மூழ்குபவன் தன் முன் நிற்கும் நண்பனை அழைத்துக் கரம் பிடிக்குமாறு கேட்க முடியும். ஆனால் யா! முஹ்யித்தீன்!! என்றழைத்து காப்பாற்றுமாறு வேண்டுவது தவறாகும். ஏனெனில் தொலைவிலிருந்து மனிதனின் ஆற்றலால் முடியாததை செவிமடுத்து, அதற்கு பதிலளிக்கும் சக்தி வல்ல இறைவனுக்கு மாத்திரமே உண்டு. இல்லாவிடில் அல்லாஹ்வுக்கும் அவனது படைப்புக்குமிடையில் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் போய்விடும். இப்படி தொலைவிலிருந்து ஜீவராசிகளின் தேவைகளையும், இரைஞ்சல்களையும் அறிந்து, செவிமடுத்து பதிளலிக்கும் ஆற்றல் ஆகியவற்றாலே இறைவன் மனிதனிலிருந்து வித்தியாசப்படுகின்றான். ஆனால் இதுபோன்ற அல்லாஹ்வுக்கெனவுள்ள விஷேடமான தன்மைகளை அவன் படைப்புகளுக்கு வழங்குபவர்கள் படைத்தவனுக்கென விஷேடமாக இனி என்னதான் மிஞ்சியுள்ளது என்பதை சற்று சிந்திப்பார்களாக.

இல்லை! அல்லாஹ்வுக்குமுண்டு, மனிதர்களுக்கு முண்டு எனக்கூறுவது வல்ல நாயனை அவன் படைப்புகளுக்கு நிகராக்கிய குற்றத்துக்கு ஆளாக்கிவிடும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ரஸூல் ﷺ அவர்கள் அனுப்பப்பட்ட சமுதாயத்தினர் அப்போது இத்தவறையே செய்தனர் என்றும், அதனாலேயே நரகம் சென்றனர் என்றும் பின் வரும் வசனம் குறிப்பிடுகின்றது.

﴿ تَٱللَّهِ إِن كُنَّا لَفِى ضَلَـٰلٍ مُّبِينٍ ﴿٩٧﴾ إِذْ نُسَوِّيكُم بِرَبِّ ٱلْعَـٰلَمِينَ ﴿٩٨﴾ ﴾

﴾ *அல்லாஹ்வின் மீது ஆணையாக, நாம் வெளிப்படையான வழிகேட்டிலேயே இருந்தோம். உங்களை நாங்கள் அகிலங்களுக்கெல்லாம் இறைவனாக இருப்பவனுடன் **சரிசமமாக** ஆக்கி வைத்தோமே* ﴿ *(26:97,98)*

மேலும் பின் வரும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

عَنْ عَبْدِ اللَّهِ قَالَ قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم كَلِمَةً وَقُلْتُ أُخْرَى قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم « مَنْ مَاتَ وَهْوَ يَدْعُو مِنْ دُونِ اللَّهِ نِدًّا دَخَلَ النَّارَ » . وَقُلْتُ أَنَا مَنْ مَاتَ وَهْوَ لاَ يَدْعُو لِلَّهِ نِدًّا دَخَلَ الْجَنَّةَ . ( صحيح البخاري)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள்: ரஸூல் ﷺ அவர்கள் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார்கள், அதோடு நானும் ஒன்றைக் குறிப்பிடுகிறேன், ரஸூல் ﷺ அவர்கள் கூறினார்கள்:

""யார் அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் அழைத்த நிலையில் மரணிக்கிறாரே அவர் நரகையே அடைவார்"", நான் கூறுகின்றேன்ஹ ""யார் அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் அழைக்காமல் மரணிக்கின்றாரோ அவர் சுவனம் அடைவார்."" (புகாரி)

## இஸ்லாத்தின் பின் இணைவைப்பால் ஏற்படும் விளைவுகள்.

வல்ல நாயன் மன்னிக்கும் மகாகிருபையாளன், ஆயினும் இணைவைப்பைப் பொறுத்தவரைக்கும் உண்மையான தௌபா இன்றி நான் மன்னிக்கவே மாட்டேன் எனப் பறைசாற்றும் பெரும் பாவமாகவும், இஸ்லாத்திலிருந்து ஒரு விசுவாசியை வெளி யேற்றுவதில் தலையானதும், அமல்கள் அனைத்தை யும் அழிக்கும் பயங்கரமானதுமாகும். இதுபற்றி திருமறை இவ்வாறு இயம்புகிறது:

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغۡفِرُ أَن يُشۡرَكَ بِهِۦ وَيَغۡفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُۚ وَمَن يُشۡرِكۡ بِٱللَّهِ فَقَدِ ٱفۡتَرَىٰٓ إِثۡمًا عَظِيمًا ﴿٤٨﴾ ﴾

*﴾நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.﴿ (4:48)*

**இக்கொடிய பாவத்தையே அல்லாஹ் பெரும் அநியாயமாகக் குறிப்பிடுகின்றான்.**

**அது பற்றி அல்குர்ஆன் கூறுகையில்:**

﴿ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَلَمْ يَلْبِسُوٓا۟ إِيمَٰنَهُم بِظُلْمٍ أُو۟لَٰٓئِكَ لَهُمُ ٱلْأَمْنُ وَهُم مُّهْتَدُونَ ﴿٨٢﴾﴿

*﴾எவர் ஈமான் கொண்டு அதன் பின்னர் தம்முடைய ஈமானை (இணை வைத்தல் என்னும்) அநீதியைக் கொண்டு களங்கப்படுத்தவில்லையோ, அவர்களுக்கே அபயமுண்டு இன்னும் அவர்களே நேர்வழியைப் பெற்றுக் கொண்டவர்கள்.﴿ (6:82)*

**புகாரி, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களில் இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் அறிவுப்புச் செய்யும் செய்தியில் மேற்கூறப்பட்ட வசனத்தில் இடம்பெறும் அநீதி என்பது**

**இணைவைத்தலேயாகும் என ரஸூல் ﷺ அவர்கள் விபரிக்கிறார்கள்.**

**இணைவைப்பவர் மீது சுவனம் ஹறாமாக்கப் பட்டுள்ளது. இதுபற்றித் திருமறையில்:**

﴿ إِنَّهُۥ مَن يُشْرِكْ بِٱللَّهِ فَقَدْ حَرَّمَ ٱللَّهُ عَلَيْهِ ٱلْجَنَّةَ وَمَأْوَىٰهُ ٱلنَّارُ ۖ وَمَا لِلظَّٰلِمِينَ مِنْ أَنصَارٍ ﴿٧٢﴾ ﴾

*﴿எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹறாமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.﴾* **(5:72)**

**மேலும் அவரது நல்லமல்கள் அனைத்தும் வீணாகி விடுகின்றன. அல்லாஹ் திருமறையில் தன் இறைதூதருக்கே இடும் கட்டளையை இங்கு நோக்குவோம்.**

﴿ وَلَقَدْ أُوحِىَ إِلَيْكَ وَإِلَى ٱلَّذِينَ مِن قَبْلِكَ لَئِنْ أَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ ٱلْخَٰسِرِينَ ﴾

*﴾ அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், "நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களில் ஆகிவிடுவீர்கள்" (என்பதுவேயாகும். ﴿* *(39:65)*

**அல்குர்ஆனில் பெரும்பாலும் இணைவைப்பு சம்பந்தமான எச்சரிக்கைகள் ரஸூல் ﷺ அவர்களை நோக்கியே விளிக்கப்படுவது இதன் பாரதூரத்தை மேலும் எமக்கு வலியுறுத்துகிறது.**

## இணைவைத்தலின் வகைகள்.

1. பெரியது.
2. சிறியது.

**முதல் வகையானது மிகப் பயங்கரமானது, ஒரு முஸ்லிமின் ஈமானைப் பறித்து, அவன் நல்லமல்களை பாழாக்கி, அதே நிலையில் அவன் தௌபா இன்றி மரணித்தால் நிரந்தர நரகில் தள்ளக்கூடியது. அதுதான் நாம் எற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வுக்கென உரிய வணக்கங்களில் எதையேனும் ஒன்றை வேறொருவருக்குச் செலுத்து வதாகும். உதாரணமாக இறை நேசர்களுக்கோ,**

**நல்லடியார்களுக்கோ, ஜின்களுக்கோ, ஷைத்தான்களுக்கோ அறுத்துப் பலியிடல். அல்லது இவர்களிடத்தில் பிராத்தித்தல்.**

**வல்ல நாயன் திருமறையில் குறிப்பிடும்போது:**

﴿ قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ﴿١٦٢﴾ لَا شَرِيكَ لَهُ ۖ وَبِذَٰلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ ﴿١٦٣﴾ ﴾

*﴿ நீர் கூறும் மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவனுக்கு யாதோர் இணையுமில்லை இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் (அவனுக்கு) வழிப்பட்டவர்களில் முஸ்லீம்களில் நான் முதன்மையானவன் (என்றும் கூறும்). ﴾ (6:162)*

**பெரிய இணைவைப்பைப் பொறுத்தவரைக்கும் முக்கியமாக நான்கு வகைகளுக்குள் உள்ளடக்கமுடியும்.**

1. **துஆ விடயத்தில் அல்லாஹு தஆலாவிடம் வேண்டுவது போன்று தமக்கு நன்மை கிடைக்கவும், துன்பம் நீங்கவும் அல்லாஹ் அல்லாதவர்களை வேண்டல். இது பற்றி அல்குர்ஆன் இவ்வாறு எச்சரிக்கிறது.**

﴿ وَٱلَّذِينَ تَدۡعُونَ مِن دُونِهِۦ مَا يَمۡلِكُونَ مِن قِطۡمِيرٍ ﴿١٣﴾ إِن تَدۡعُوهُمۡ لَا يَسۡمَعُواْ دُعَآءَكُمۡ وَلَوۡ سَمِعُواْ مَا ٱسۡتَجَابُواْ لَكُمۡۖ وَيَوۡمَ ٱلۡقِيَٰمَةِ يَكۡفُرُونَ بِشِرۡكِكُمۡۚ وَلَا يُنَبِّئُكَ مِثۡلُ خَبِيرٍ ﴿١٤﴾ ﴾

*﴾ அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை)க்கின்றீர்களோ, அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை. நீங்கள் அவர்களைப் பிரார்த்தி(த்து அழை) த்தாலும்,அவர்கள் உங்கள் பிரார்த்தனையை (அழைப்பை)ச் செவியேற்கார், செவியேற்றாலும் கூட உங்களுக்கு பதில் அளிக்கமாட்டார்கள். கியாம நாளில் நீங்கள் இணைவைத்ததையும் அவர்கள் நிராகரித்து விடுவார்கள் யாவற்றையும் நன்கு அறிபவனைப் போன்று எவருமே உங்களுக்கு அறிவிக்க மாட்டார்கள். ﴿* *(35:13. 14)*

**2. தன் வணக்கத்தின் நோக்கமும், நாட்டமும் அடிப்படையில், ஆரம்பத்திலிருந்து அல்லாஹ் அல்லாததுக்கு அமைவதாகும். இவ்வகை பற்றி அல்குர்ஆன்:**

﴿ مَن كَانَ يُرِيدُ ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا وَزِينَتَهَا نُوَفِّ إِلَيْهِمْ أَعْمَٰلَهُمْ فِيهَا وَهُمْ فِيهَا لَا يُبْخَسُونَ ﴿١٥﴾ أُو۟لَٰٓئِكَ ٱلَّذِينَ لَيْسَ لَهُمْ فِى ٱلْءَاخِرَةِ إِلَّا ٱلنَّارُ ۖ وَحَبِطَ مَا صَنَعُوا۟ فِيهَا وَبَٰطِلٌ مَّا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٦﴾ ﴾

*﴾எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) நாடினால் அவர்களுடைய செயல்களுக்குரிய (பலன்களை) இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவோம் அவற்றில், அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள்.*

*இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவுமில்லை, (இவ்வுலகில்) இவர்கள் செய்த யாவும் அழிந்துவிட்டன அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!﴿ (11:15,16)*

**3. சட்டம் இயற்றுவதிலும், மார்க்கமாக்கலிலும் இறைவனோடு மற்றவர்களையும் சமமாக்குதல்.**

**எவரேனும் மார்க்கம் தீர்மானிக்கும் உரிமை, சட்டம் இயற்றும் அதிகாரம் அல்லாஹ் அல்லாதவர்களுக்கும் முடியுமென நம்பினால் அல்லாஹ்வின் உரிமையில் கையடித்து அதை மற்றவர்களுக்கு வழங்கிய குற்றத்துக்கு ஆளாகுவர்.**

**இது பற்றித் திருமறையில்:**

﴿ أَمْ لَهُمْ شُرَكَـٰٓؤُا۟ شَرَعُوا۟ لَهُم مِّنَ ٱلدِّينِ مَا لَمْ يَأْذَنۢ بِهِ ٱللَّهُ ۚ وَلَوْلَا
كَلِمَةُ ٱلْفَصْلِ لَقُضِىَ بَيْنَهُمْ ۗ وَإِنَّ ٱلظَّـٰلِمِينَ لَهُمْ عَذَابٌ أَلِيمٌ ﴿٢١﴾ ﴾

*﴾அல்லது அல்லாஹ் அனுமதிக்காததை அவர்களுக்கு மார்க்கமாக்கி வைக்கக்கூடிய இணை (த்தெய்வங்)கள் அவர்களுக்கு இருக்கின்றனவா? மேலும், (மறுமையில் விசாரணை –க்குப் பிறகு தக்க கூலி கொடுக்கப்படும் என்னும் இறைவனின்) தீர்ப்புப் பற்றிய வாக்கு இல்லாதிருப்பின் (இதுவரை) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் நிச்சயமாக அநியாயக் காரர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு.﴿ (42:21)*

**மேலும் யூதர்கள், கிறிஸ்தவர்கள் பற்றி திருமறை இவ்வாறு விமர்சிக்கிறது.**

﴿ أَلَمْ تَرَ إِلَى ٱلَّذِينَ يَزْعُمُونَ أَنَّهُمْ ءَامَنُوا۟ بِمَآ أُنزِلَ إِلَيْكَ وَمَآ أُنزِلَ مِن قَبْلِكَ
يُرِيدُونَ أَن يَتَحَاكَمُوٓا۟ إِلَى ٱلطَّـٰغُوتِ وَقَدْ أُمِرُوٓا۟ أَن يَكْفُرُوا۟ بِهِۦ وَيُرِيدُ
ٱلشَّيْطَـٰنُ أَن يُضِلَّهُمْ ضَلَـٰلًۢا بَعِيدًا ﴿٦٠﴾ ﴾

*﴾ (நபியே!) உம்மீது இறக்கப்பட்ட இ(வ் வேதத்)தையும், உமக்கு முன்னால் இறக்கப்பட்ட (வேதங்கள் அனைத்)தையும் நம்புவதாக வாதித்துக் கொண்டிருப்போரை நீர் பார்க்கவில்லையா? (எந்த ஷைத்தானை) நிராகரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறதோ அந்த ஷைத்தானைத் தீர்ப்புக் கூறுபவனாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள் அந்த ஷைத்தானோ அவர்களை வெகு தூரமானவழிகேட்டில் தள்ளிவிட விரும்புகிறான். ﴿ (4:60)*

**4- அல்லாஹு தஆலாவை நேசிப்பதற்கு சரிசமமாக, அல்லது அதை விட அதிகமாக அவன் அல்லாதோரையும் நேசித்தல்.**

**ஒரு உண்மை விசுவாசியிடத்தில் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விட நேசத்துக்கும், அன்புக்குமுரியவர்கள் வேறு எவரும் இருக்கமுடியாது. அவ்வாறு வேறு எவரையும் அல்லாஹு தஆலாவைவிட நேசிப்பது அல்லாஹ்வுக்குரிய உரிமையை அவன் படைப்புக்கு செலுத்திய மகா குற்றமாக மாறிவிடுகிறது. இன்று அநேக முஸ்லிம்கள் படைத்த நாயனை நினைப்பதை விட தமது கஷ்டங்களின்போது வேறு நபர்களையே நினைக்கின்றனர். உண்மையிலேயே அல்லாஹ்வின் நேசம் உள்ளத்தில் வேரூண்டி யிருந்தால் அவனையல்லவா நினைக்கவேண்டும்!**

மேலும் அதற்கு மிக அருகதையுடையோனும் அவனல்லவா?.

இவ்விடயத்தில் இணைவைப்பாளர்கள் நிலைபற்றி திருமறை இவ்வாறு கூறுகிறது:

﴿ وَمِنَ ٱلنَّاسِ مَن يَتَّخِذُ مِن دُونِ ٱللَّهِ أَندَادًا يُحِبُّونَهُمْ كَحُبِّ ٱللَّهِ ۖ وَٱلَّذِينَ
ءَامَنُوٓا۟ أَشَدُّ حُبًّا لِّلَّهِ ۗ وَلَوْ يَرَى ٱلَّذِينَ ظَلَمُوٓا۟ إِذْ يَرَوْنَ ٱلْعَذَابَ أَنَّ ٱلْقُوَّةَ لِلَّهِ جَمِيعًا
وَأَنَّ ٱللَّهَ شَدِيدُ ٱلْعَذَابِ ﴿١٦٥﴾ ﴾

*﴿அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள் இன்னும் (இணை வைக்கும்) அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள். அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்)﴾*

*(2:165)*

மேலும் ரஸூல் ﷺ அவர்கள் தன்னை விட எவரும் யாரையும் நேசிக்க முடியாது, அவ்வாறு நேசித்தால் அவரது நிலை என்னவாகும் என்பதை கூறும் போது:

عن أنس بن مالك قال قال رسول الله صلى الله عليه و سلم لا يؤمن أحدكم حتى أكون أحب إليه من ولده ووالده والناس أجمعين (البخاري)

““உங்களில் எவரும் அவருடைய பிள்ளையை விடவும்,தந்தையை விடவும்,முழு மனிதர்களை விடவும் விருப்பத்துக்குரியவராக நான் ஆகும் வரை பூரண விசுவாசியாக முடியாது.”” (புகாரி)

எனக்கூறியிருக்க எல்லாவற்றிற்கும் மேலான அல்லஹ்வை விட அவன் அல்லாதோரை நேசிப்போரின் நிலை என்னவாகும் என்பதை சொல்லவேண்டிய தில்லை.

## ஒரு முஸ்லிம் இவ்வினை வைப்பில் ஈடுபடும்போது ஏற்படும் விளைவுகள்.

- ஈமான் இழக்கப்படல்.
- நல்லமல்கள் அனைத்தும் அழிந்துவிடல்.
- தௌபா இன்றி மரணித்தால் நிரந்தர நரகம் அடைதல்.
- பாதுகாப்பு, அமைதி இழங்கப்படல்.

- அல்லாஹ்வின் கோபத்துக்கும், சாபத்துக்கும் இலக்காகுதல்.

## இணைவைப்பின் இரண்டாவது வகை.

இவ்வகையையே நாம் சிறிய இணை என்றழைக்கிறோம். அதாவது இவ்வகையானது பெரிய இணைவைப்பின் தரத்தை எட்டாவிடினும் ஈமானைப் பாதிக்கக் கூடியதும், பெரிய இணைவைப்பிற்கு கொண்டுசெல்லக்கூடியதும், மறுமையில் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது. மேலும் இமாம் இப்னுல் கையிம் அவர்கள் தனது "இஃலாமுல் முவக்கியீன் " எனும் நூலில் இவ்வகை சார்ந்ததை பெரும் பாவங்களைவிடவும் மேல் தரத்தில் வைத்து நோக்கக்கூடிய கொடிய பாவமாக குறிப்பிட்டுள்ளார்கள்.

இணைவைப்பில் பெரியதிலிருந்து சிறியது எதுவென பிரித்தறிய சில வழிகள் உண்டு.அவை வருமாறு:

1- அது சிறியது எனக் குறித்து ஹதீதில் வருதல். உதாரணமாக பின் வரும் ஹதீதில் காணலாம்.

عَنْ عَمْرٍو عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ أَنَّ رَسُولَ اللَّهِ -صلى الله عليه وسلم- قَالَ « إِنَّ أَخْوَفَ مَا أَخَافُ عَلَيْكُمُ الشِّرْكُ الأَصْغَرُ ». قَالُوا وَمَا الشِّرْكُ الأَصْغَرُ يَا رَسُولَ اللَّهِ قَالَ « الرِّيَاءُ » (مسندأحمد)

**மஹ்மூத் பின் லபீத் ﷻ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் கூறினார்கள்:**

""" நான் உங்களின் மீது மிகப் பயப்படும் விடயம் யாதெனில் சிறிய இணையாகும்,அப்போது அல்லாஹ்வின் தூதரே! சிறிய இணை யாது எனக் கேட்டார்கள்ஹஅதுவே முகஸ்துதியாகும் என பதிலளித்தர்கள்."" (முஸ்னத் அஹ்மத்)

**2-ஸஹாபாக்கள் அதை சிறியது என விளக்கமளித்தல்.**

**3-அல்குர்ஆன், அல்ஹதீத் ஆதாரங்களின் அடிப்படையில் தெளிவாகுதல்.**

**4- (ال) " அல் " சேராமல் வெறும் (شرك) " ஸிர்க் " என்று வருதல்.**

## சிறிய இணைவைத்தலின் வகைகள்.

**1-**வெளிரங்கமானது.

**இவ்வகையைப் பொறுத்தவரைக்கும் இது எமது வார்த்தைகளாலும், செயல்களாலும் இடம்பெறுபவையாகும்.**

*வார்த்தைகளால் ஏற்படக்கூடியது:*

**இவ்வகை அல்லாஹ் அல்லாதவற்றை கொண்டு சத்தியம் செய்தல் போன்றவற்றைக் குறிக்கிறது.**

**இப்னு உமர் ﷺ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.**

**عن ابْنَ عُمَرَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ -صلى الله عليه وسلم يَقُولُ « مَنْ حَلَفَ بِغَيْرِ اللَّهِ فَقَدْ أَشْرَكَ ..** (أبو داود والترمذي وأحمد)

""யார் அல்லாஹ் அல்லாததைக் கொண்டு சத்தியம் செய்கின்றாறோ அவர் இணைவைத்து விட்டார்.""
(அபூதாவூத்,திர்மிதி,அஹ்மத்)

**மேலும் (ماشاء الله وشئت) அல்லாஹ்வும்,நீயும் நாடியது என அல்லாஹ்வோடு மற்றவரை இணைத்துக் கூறல்.**

**இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள்.**

**""ரஸூல் ﷺ அவர்களிடம் ஒரு மனிதர் வந்து பேசிக்கொண்டிருக்கையில் மேற் சொன்ன வார்த்தையைக் கூறினார்,இதைக்கேட்ட ரஸூல் ﷺ அவர்கள் உமக்கு என்ன நேர்ந்தது! என்னை அல்லாஹ்வுக்கு நிகராக ஆக்கிவிட்டீரே என்று**

(அல்லாஹ் மாத்திரம் –ماشاء الله وحده– எச்சரித்துவிட்டு நாடியதே) என்றே கூறுமாறு பணித்தார்கள்.””
(அஹ்மத்,நஸாயீ)

இதேபோன்றுதான் “இவர் இல்லையென்றால் இது நிறைவேறிருக்காது” எனக்கூறுவதும்.

சரியாகக் கூறின் இவ்வாறு கூறவேண்டும். “அல்லாஹ் இல்லாவிடின், அடுத்து இன்னார்..” என்றே கூறவேண்டுமே தவிர, அல்லாஹ்வோடு சமப்படுத்தி யாரையும் கூறுவதற்கு எவருக்கும் அனுமதி கிடையாது, ஏனெனில் எமது நாட்டமும், விருப்பமும் கூட அல்லாஹ் நாடினாலே தவிர நிகழ முடியாதென அல்லாஹ்வின் நாட்டத்தில் நாம் தங்கியிருக்க எவ்வாறு இப்படிக்கூறுவது!?

வல்ல நாயன் திருமறையில் கூறுகின்றான்:

﴿وَمَا تَشَآءُونَ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُ رَبُّ ٱلْعَٰلَمِينَ ﴿٢٩﴾﴾

*﴿அல்லாஹ் நாடினாலே தவிர நீங்கள் நாட முடியாது.﴾*

*செயல்களால் ஏற்படுபவை:*

- நூல்கள், வளையல்களை நோய் நொடிகளை நீக்குவதற்காக, அல்லது அவை அணுகுவதைத் தடுப்பதற்காக அணிதல்.

வல்ல நாயன் நோய்க்கான மார்க்க ரீதியான, அல்லது பௌதீக ரீதியான நிவாரணிகளை வைத்துள்ளான். எனவே எவ்வகையிலும் நோய்க்கும் அதற்கும் சம்மந்தமில்லாத இதுபோன்றவற்றை அணிவது அல்லாஹ் அல்லாததின் மீது முழு நம்பிக்கைவைக்கும் இணைவைப்பாக மாறுகிறது, ஏனெனில் துன்பம் போக்குபவனும், அதிலிருந்து பாதுகாப்பவனும் அந்த நாயனைத் தவிர வேறு யாரும் கிடையாது. எனவே அவனிடத்திலேயே அதிலிருந்து பாதுகாப்புத் தேடவேண்டுமே தவிர சாதாரண அற்பமானவற்றிற்கு அடிமையாகி அவற்றில் எமது நம்பிக்கையை அடகு வைத்துவிடக்கூடாது.

திருமறை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

﴿ وَإِن يَمْسَسْكَ ٱللَّهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهُۥٓ إِلَّا هُوَ ۖ وَإِن يُرِدْكَ بِخَيْرٍ فَلَا رَآدَّ لِفَضْلِهِۦ ۚ يُصِيبُ بِهِۦ مَن يَشَآءُ مِنْ عِبَادِهِۦ ۚ وَهُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ ﴿١٠٧﴾ ﴾

*﴾அல்லாஹ் உமக்கு ஒரு தீங்கை அளித்தால் அவனைத் தவிர வேறு எவரும் அதை நீக்குபவர் இல்லை, உமக்கு அவன் ஒரு நன்மையை நாடினால் அவன் அருளை தட்டிவிடுபவன் யாரும் இல்லை.﴿* *(10:107)*

எனவே! எவரேனும் இவைகள் துன்பத்தை நீக்கவோ, அல்லது அதைத் தடுக்கவோ காரணமாயிருக்கின்றன

என நம்பினால் அவர் சிறிய இணைவைப்பில் வீழ்ந்துவிட்டார், மாறாக இவற்றுக்கு சுயமாகவே இவற்றை செய்யும் சக்தியும், வல்லமையும் உண்டென நம்பினால் அவர் பெரிய இணைவைப்பில் வீழ்ந்துவிட்டார்.

❖ கண்ணூறிலிருந்து பாதுகாக்கப்பட குழந்தைகளின் கழுத்தில், அல்லது கரங்களில் தாயத்துக் கட்டுவது.

இது பற்றி ரஸூல் ﷺ அவர்கள் கூறுகையில்:

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرِ الْجُهَنِيِّ أَنَّ رَسُولَ اللَّهِ -صلى الله عليه وسلم قال: مَنْ عَلَّقَ تَمِيمَةً فَقَدْ أَشْرَكَ » (مسند أحمد)

"" உக்பா பின் ஆமிர் ؓ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ""எவர் தாயத்தைக் கொழுகிக் கொள்கிறாரோ அவர் இணைவைத்துவிட்டார்.""
(அஹ்மத்)

எனவே சிறுவர்கள் கண்ணூறு போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட ரஸூல் ﷺ அவர்கள் எவ்வாறு எமக்கு செய்துகாட்டியுள்ளார்களோ அதை அறிந்துசெய்வது மிகப் பயனுள்ளதாகும்.

அது வருமாறு:

**وعن ابن عباس قال : كان رسول الله صلى الله عليه وسلم يعوذ الحسن والحسين : " أعيذكما بكلمات الله التامة من كل شيطان وهامة ومن كل عين لامة " ويقول : " إن أباكما كان يعوذ بهما إسماعيل وإسحاق " .** (رواه البخاري)

இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் ஹசன்,ஹுஸைன் ஆகிய இருவரையும் பின் வரும் துஆவை ஓதி மந்திரிப்பவர்களாக இருந்தார்கள்.

" أعيذكما بكلمات الله التامة من كل شيطان وهامة ومن كل عين لامة "

**மேலும் உங்கள் தகப்பனார்( நபி இப்ராஹீம்)தன் பிள்ளைகளான இஸ்மாயீல்,இஸ்ஹாக் ஆகிய இருவருக்கும் இப்படியே மந்திரப்பார்கள் எனவும் கூறுவார்கள்.** (புகாரி)

2-இரண்டாம் வகை மறைவானது.

**இவ்வகை மறைவானதென்று கூறப்படக் காரணம் இவை எண்ணங்கள், நோக்கங்கள், நாட்டங்கள் என்பவற்றில் ஏற்படக்கூடியவையாகும். அவை வருமாறு:**

- **முகஸ்துதி. அதாவது தம் வணக்கங்கள் யாவையும் பெயருக்கும் ,புகழுக்குமாக செய்தல்.**

**இது பற்றித் திருமறை பின்வருமாறு இயம்புகிறது:**

﴿وَمَآ أُمِرُوٓا۟ إِلَّا لِيَعْبُدُوا۟ ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ وَيُقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُوا۟ ٱلزَّكَوٰةَ ۚ وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ ﴿٥﴾﴾

*﴿ வணக்கத்தை அல்லாஹ்வுக்கே தூய்மையாக்கி வணங்குமாறே தவிர அவர்கள் ஏவப்பட வில்லை.﴾ (98:5)*

**இமாம் இப்னு ரஜப் அல் ஹன்பலி (ரஹ்) அவர்கள் தனது -ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்- எனும் நூலில்: "ஒரு வணக்கத்துடன் முகஸ்துதி கலக்கும் போது அதை மூன்று தரமாக தரம் பிரிக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்."**

**அவை வருமாறு:**

**1- வணக்கத்தை ஆரம்பிக்கும் போதே அல்லாஹ்வுக்காக வேண்டி என்ற எண்ணமின்றி வேறு நோக்கத்திற்காக ஆரம்பித்தல். இவ்வகையானது உண்மையில் ஒரு முஃமினிடமிருந்து உருவாக முடியாது, மாறாக அது நயவஞ்சகர்களின் செயலாகும். இதையே பின்வரும் வசனம் இவ்வாறு விளக்குகிறது.**

﴿إِنَّ ٱلْمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمْ وَإِذَا قَامُوٓا۟ إِلَى ٱلصَّلَوٰةِ قَامُوا۟
كُسَالَىٰ يُرَآءُونَ ٱلنَّاسَ وَلَا يَذْكُرُونَ ٱللَّهَ إِلَّا قَلِيلًا ﴿١٤٢﴾﴾

*﴿நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்துவிடுவான். தொழுகைக்காக அவர்கள் நின்றால் சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள். மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்). இன்னும் மிகச் சொற்பமாகவே அன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.﴾* (4:142)

**2- ஆரம்பத்தில் அல்லாஹ்வுக்காக என்ற எண்ணத்துடனும், அதனுடன் சேர்ந்து முகஸ்துதியும் கலந்துவிடல். இவ்வகை வணக்கமும் நிராகரிக்கப் பட்டதாகவே மாறிவடும். ஏனெனில் பின் வரும் செய்தி இவ்வாறு கூறுகிறது.**

**عَنْ أَبِى هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- « قَالَ اللَّهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلاً أَشْرَكَ فِيهِ مَعِى غَيْرِى تَرَكْتُهُ وَشِرْكَهُ.** ‹ (مسلم)

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் (ஸல்) அவர்கள், அல்லாஹுதஆலா கூறுவதாகக் கூறுகிறார்கள்.

"""நான் இணையாளர்களின் இணையை விட்டும் தேவையற்றவன்,யார் ஒரு செயலைப் புரிந்து அதில் என்னுடன் இன்னொருவரை கூட்டாக்கினால் அவரையும் அவருடைய இணையையும் அவரோடு விட்டுவிடுவேன்.""" (முஸ்லிம்)

**3- ஆரம்பத்தில் வணக்கத்தை அல்லாஹ்வுக்காக வேண்டியே ஆரம்பித்து, இடையில் முகஸ்துதி கலப்பதாகும்.**

**இதைப்பொறுத்தவரைக்கும் மனிதன் எனும் அடிப்ப டையில் இவ்வெண்ணம் வந்தாலும், அதை உடன் தட்டிவிட்டால் எவ்வித தவறுமில்லை, ஆனால் தொடர்ந்தும் உள்ளத்தில் வைத்துக்கொண்டால் அவ்வணக்கத்தின் நிலை என்ன என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ,இப்னு ஜரீர் அத்தபரி ஆகியோர், ஆரம்பத்தில் உள்ள நிய்யத்தின் அடிப்ப டையில் அவன் கூலியைப் பெறுவான் எனக் கருதுகிறார்கள்.**

## 2-அல்லாஹ்வுக்கிடையிலும், எமக்கிடையிலும் அல்லாஹ ٍ தஆலாவிடம் பிரார்த்திப்பது போன்று பிரார்த்திப்பதற்கும், வேண்டுவதற்கும், நம்பிக்கைவைப்பதற்கும், சிபாரிசு செய்வதற்கும் இடைத்தரகர்களை ஆக்கிக்கொள்ளுதல்.

இவ்வகையை எடுத்துக்கொண்டால் இதில்தான் குறைஷிக்காபிர்கள் கோட்டை விட்டிருந்தார்கள், இதை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாத்தின் கொள்கைப் பிரச்சாரம் முழுங்கியது. காரணம் யாதெனில் அந்தமக்கள் அல்லாஹ்வை ரப்பாகவும், அவனே படைப்பவனும், ஆட்சிசெய்பவனும், நிருவகிப்பவனும் என ஏற்றிருந்தனர். எனவே இஸ்லாம் உதயமாகி மேலும் இதையே அவர்களுக்கு மத்தியில் போதிப்பது அர்தமற்ற செயலாக மாறிவிடும். இதை பின் வரும் வசனம் கோடிட்டுக் காட்டுகிறது.

﴿ قُلْ مَن يَرْزُقُكُم مِّنَ ٱلسَّمَآءِ وَٱلْأَرْضِ أَمَّن يَمْلِكُ ٱلسَّمْعَ وَٱلْأَبْصَـٰرَ وَمَن يُخْرِجُ ٱلْحَىَّ مِنَ ٱلْمَيِّتِ وَيُخْرِجُ ٱلْمَيِّتَ مِنَ ٱلْحَىِّ وَمَن يُدَبِّرُ ٱلْأَمْرَ ۚ فَسَيَقُولُونَ ٱللَّهُ ۚ فَقُلْ أَفَلَا تَتَّقُونَ ﴿٣١﴾ ﴾

*﴿உங்களுக்கு வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிப்புலன் மீதும், (உங்கள்)பார்வைகளின் மீதும் சக்தியு டையவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ள வற்றையும், உயிருள்ள*

*வற்றிலிருந்து இறந்த வற்றையும் வெளிப்ப டுத்துபவன் யார்? (அகிலங்களின் அனைத்துக்) காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துபவன் யார்?" என்று (நபியே!) நீர் கேளும். உடனே அவர்கள் "அல்லாஹ்" என பதிலளிப்பார்கள் "அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா? என்று நீர் கேட்பீராக.* ﴾ *(10:31)*

**இவ்வாறு மிகத்தெளிவாக அல்லாஹ்வை விளங்கியிருந்த அந்த மக்கள் என்ன தவறு விட்டார்கள்? ஆம்! அவர்கள் நாம் மேலே குறிப்பிட்டது போன்று தமக்கும், அல்லாஹ்வுக்கு மிடையில் இடைத்தரகர்களை, வணங்குவதற்கும், பிரார்த்திப்பதற்கும், கஷ்டத்தின்போது ஒதுங்கு வதற்கும் ஏற்படுத்திக் கொண்டார்கள். எனவேதான், அல்லாஹு தஆலாவை இவ்வளவு தெளிவாகப்புரிந்த நீங்கள் ஏன் அவனை விட்டுவிட்டு இடைத்தரகர்களை ஆக்கிக்கொள்கிறீர்கள்? எனக் கேட்டால் அவர்கள் தரும் பதிலை திருமறை வசனம் இவ்வாறு கூறுகிறது.**

﴿ وَالَّذِينَ اتَّخَذُوا مِن دُونِهِ أَوْلِيَاءَ مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَا إِلَى اللَّهِ زُلْفَىٰ

إِنَّ اللَّهَ يَحْكُمُ بَيْنَهُمْ فِي مَا هُمْ فِيهِ يَخْتَلِفُونَ إِنَّ اللَّهَ لَا يَهْدِي مَنْ هُوَ كَاذِبٌ

كَفَّارٌ ﴾

*﴿அல்லாஹ்விடம் எங்களை மிக நெருக்கமாக்குவார்கள் என்பதற்காகவே தவிர இவர்களை நாம் வணங்கவில்லை (எனக் கூறுகின்றனர்.) ﴾* *(39:3)*

**மேலும் மற்றுமோர் நோக்கத்தைப் பற்றிக்குறிப்பிடும்போது:**

﴿ وَيَعْبُدُونَ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْ وَيَقُولُونَ هَٰٓؤُلَآءِ شُفَعَٰٓؤُنَا عِندَ ٱللَّهِ ۚ قُلْ أَتُنَبِّـُٔونَ ٱللَّهَ بِمَا لَا يَعْلَمُ فِى ٱلسَّمَٰوَٰتِ وَلَا فِى ٱلْأَرْضِ ۚ سُبْحَٰنَهُۥ وَتَعَٰلَىٰ عَمَّا يُشْرِكُونَ ﴿١٨﴾ ﴾

*﴿ தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள் இன்னும் அவர்கள், "இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் சிபாரிசு செய்பவை" என்றும் கூறுகிறார்கள்.﴾* *(10:18)*

**இவ்வகை இணைவைப்பில்தான் இன்றைய அநேக முஸ்லீம்கள் வீழ்ந்துவிட்டனர். தமக்கும், அல்லாஹ் வுக்குமிடையில் தேவைகள் நிறைவேற்றவும், துன்பம் போக்கவும், இன்பம் தரவுமென, இன்னும் பல தேவைகளுக்காக இறை நேசர்கள் என்றும், நல்லடியார்கள் என்றும் வைத்துக்கொண்டு, அவர்களின் மண்ணறைகளுக்குச் சென்று**

அல்லாஹ்விடம் வேண்டுவது போன்று கனிந்து, பணிந்து, பயபக்தியுடன் வேண்டுகின்றனர். அல்லாஹ்விடமே நாம் கேட்கவேண்டும், அவனை மாத்திரமே வேண்டவேண்டும் எனக் கூறினால் முகம் சுழிக்கின்றனர். சுப்ஹானல்லாஹ்! இதே நிலையே முஷ்ரிகீன்களிடமும், அல்லாஹ்விடம் மாத்திரமே கேளுங்களென்றால் காணப்பட்டது. இதைத் துள்ளியமாகத் தொட்டுக்காட்டும் திருமறை வசனத்துக்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.

﴿ وَإِذَا ذُكِرَ ٱللَّهُ وَحۡدَهُ ٱشۡمَأَزَّتۡ قُلُوبُ ٱلَّذِينَ لَا يُؤۡمِنُونَ بِٱلۡأٓخِرَةِۖ وَإِذَا ذُكِرَ ٱلَّذِينَ مِن دُونِهِۦٓ إِذَا هُمۡ يَسۡتَبۡشِرُونَ ٤٥ ﴾

*﴾ மேலும், அல்லாஹ் (வின் பெயர்) மட்டும் தனித்துக் கூறப்பட்டால் மறுமையை ஈமான் கொள்ளாதவர்களின் இருதயங்கள் சுருங்கி விடுகின்றன மேலும் அவனை அன்றி மற்றவர் (களின் பெயர்) கள் கூறப்பட்டால், உடனே அவர்கள் பெரிதும் மகிழ்வடை கிறார்கள். ﴿* **(39:45)**

மற்றுமோரிடத்தில்:

﴿ ذَٰلِكُم بِأَنَّهُۥٓ إِذَا دُعِيَ ٱللَّهُ وَحۡدَهُۥ كَفَرۡتُمۡۖ وَإِن يُشۡرَكۡ بِهِۦ تُؤۡمِنُواْۚ فَٱلۡحُكۡمُ لِلَّهِ ٱلۡعَلِيِّ ٱلۡكَبِيرِ ١٢ ﴾

*﴿அதற்குக் காரணம் அல்லாஹ்வை மாத்திரம் அழைக்கப்பட்ட போது நீங்கள் நிராகரித்தீர்கள். ஆனால் அவனுக்கு (எதையும்) இணையாக்கப்பட்டால் (அதன் மீது) நீங்கள் நம்பிக்கை கொண்டீர்கள் ஆகவே இத்தீர்ப்பு மிக்க மேலானவனும், மகாப் பெரியவனுமான அல்லாஹ்வுக்கே உரியது. ﴾(40:12)*

**இவ்வசனங்களை படித்தும் மேலும் ஒரு சாரார் நாம் முஹம்மத் ﷺ அவர்களையும், திருக்குர் ஆனையும், மறுமை நாளையும் ஏற்றிருக்கிறோம்,மக்கத்துக் காபிர்களோ இவற்றை நம்பவில்லையே! அவர்கள் விடயத்தில்தானே இவ்வசனம் பேசுகிறது என வாதிடுகின்றனர். அப்படியாயின், நாம் முதற் கட்டமாக நம் இச்செயல் தவறு என ஏற்றுவிட்டோம். ஆனால் இஸ்லாத்துக்கு வெளியில் இருந்துகொண்டு செய்தால்தான் இது தவறு என்றும், இஸ்லாத்துக்கு வந்ததன் பின்னால் வேண்டியதை செய்து கொல்லமுயும் என்பதையுமே இது காட்டுகின்றது. ஆகவேதான் இஸ்லாத்துக்குள் நுழைந்ததன் பின்னரும் நாம் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் விடயங்களையும் தெரிந்துகொள்வது அவசியமாகும்.**

**வல்லை நாயன் திருமறையில்:**

﴿ قُلِ ٱدْعُواْ ٱلَّذِينَ زَعَمْتُم مِّن دُونِ ٱللَّهِ لَا يَمْلِكُونَ مِثْقَالَ ذَرَّةٍ فِى
ٱلسَّمَٰوَٰتِ وَلَا فِى ٱلْأَرْضِ وَمَا لَهُمْ فِيهِمَا مِن شِرْكٍ وَمَا لَهُۥ مِنْهُم مِّن ظَهِيرٍ ﴿٢٢﴾ ﴾

*﴾அல்லாஹ்வையன்றி எவரை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்களை அழையுங்கள் வானங்களிலோ, இன்னும் பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும்- அவற்றில் இவர்களுக்கு எத்தகைய- அதிகாரமில்லை இன்னும் அவனுக்கு உதவியாளர்களும் அவர்களில்யாருமில்லை.﴿ (34:22)*

**யாரும் எவரை அழைத்தாலும் நன்மையும், தீமையும் அல்லாஹ்வின் கரத்திலேயே தங்கியுள்ளது. எல்லோரும் அவன் அதிகாரத்துக்குற்பட்டவர்களே. இதையே பின் வரும் வசனம் விளக்குகிறது.**

﴿ قُلْ أَفَرَءَيْتُم مَّا تَدْعُونَ مِن دُونِ ٱللَّهِ إِنْ أَرَادَنِيَ ٱللَّهُ بِضُرٍّ هَلْ هُنَّ كَـٰشِفَـٰتُ ضُرِّهِۦٓ أَوْ أَرَادَنِى بِرَحْمَةٍ هَلْ هُنَّ مُمْسِكَـٰتُ رَحْمَتِهِۦ ۚ قُلْ حَسْبِىَ ٱللَّهُ ۖ عَلَيْهِ يَتَوَكَّلُ ٱلْمُتَوَكِّلُونَ ﴿٣٨﴾ ﴾

*﴾(நபியே!) நீர் சொல்வீராக "அல்லாஹ் எனக்கு ஏதேனும் ஒரு கெடுதி செய்ய நாடினால் நீங்கள் (பிரார்த்தித்து) அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை அக்கெடுதியை நீக்கிவிட முடியுமா? அல்லது அவன் எனக்கு ரஹ்மத் செய்ய நாடினால் அவனுடைய (அந்த) ரஹ்மத்தை அவை தடுத்துவிட முடியுமா? என்பதை*

*நீங்கள் கவனித்தீர்களா? "(நபியே!) மேலும் நீர் கூறுவீராக. "அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன் உறுதியாக நம்பிக்கை வைப்போரெல்லாம், அவன் மீதே உறுதியாக நம்பிக்கை கொள்ளல் வேண்டும்."﴿* *(39:38)*

**மேலும் ஷபாஃஅத் பற்றிக் கூறும்போது:**

﴿وَلَا تَنفَعُ ٱلشَّفَٰعَةُ عِندَهُۥٓ إِلَّا لِمَنْ أَذِنَ لَهُۥ ۝٢٣﴾

*﴾அன்றியும், அவன் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவருக்குத் தவிர, அவனிடத்தில் எந்த பரிந்துரையும் பயனளிக்காது﴿* *(34:23)*

**எனவே குறைஷிகளும் அல்லாஹ்வை ரப்பாக ஏற்றிருக்க, எந்நோக்கின் அடிப்படையில் அவன் அல்லாதோரிடத்தில் நெருங்கினரோ, அதற்காகவே இன்றைய முஸ்லிம்களும் நெருங்குகின்றனர். அதாவது நாம் அல்லாஹ்விடத்தில் நேரடியாகக் கேட்கவோ, நெருங்கவோ முடியாது, மாறாக இறைநேசர்கள், நல்லடியார்கள் மூலமே நெருங்கமுடியும் என்பதே குறைசிக்காபிர்களின் நிலைப்பாடாகும்.**

**3- யார் இணைவைப்போரை,நிராகரிப்பாளர்களை அவர்கள் நிராகரிப்போர் எனக்கூறவில்லையோ, அல்லது அவர்கள் நிராகரிப்பில் சந்தேகிக் கின்றனரோ, அல்லது அவர்கள் கொள்கையை சரிகாண்கின்றனரோ அப்படிப்பட்டவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிவிட்டனர்.**

அதாவது சில வகுப்பாரை அல்லாஹ் திருமறையில் அவர்கள் கொள்கைகள், நம்பிக்கைகள், செயற்பாடுகள் காரணமாக நிராகரிப்பாளர்கள், இணைவைப்பாளர்கள் எனப் பகிரங்கமாக பெயர் சூட்டியுள்ளான். எனவே அவர்களை ஒரு முஸ்லிம் அவ்வாறே நோக்கவேண்டுமே தவிர அவர்கள் விடயத்தில் படைத்தவனை மீறி மேற் கண்டவாறு எக்காரணத்திற்காகவும் ஐயப்படவோ, அவர்கள் கொள்கையை சரிகாணவோ,நியாயம் கூறவோ முற்படக்கூடாது.

ஏனெனில் ஈமான் என்பது இரு முக்கிய அம்சங்களை நிவர்த்தி செய்யாமல் நிறைவேறாது.

1-அல்லாஹ் அன்றி வணங்கப்படுபவற்றை நிராகரித்தல்.

2- அல்லாஹ்வை மாத்திரமே விசுவாசித்தல்.

இதுவே நாம் கூறும் ஏகத்துவக் கலிமாவின் கருத்துமாகும். அதாவது "லாஇலாஹ" என்பது அல்லாஹ் அல்லாத அனைத்தையும் நிராகரிப்பதையும்,

"இல்லல்லாஹ்" என்பது அவனையே வணங்குவதை மாத்திரம் குறிக்கிறது. இவ்விரண்டையும் தெளிவுபடுத்தியே பின்வரும் வசனம் இடம்பெற்றுள்ளது.

﴿ فَمَن يَكْفُرْ بِالطَّاغُوتِ وَيُؤْمِن بِاللَّهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَىٰ لَا انفِصَامَ لَهَا ۗ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ﴾

*﴿எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத உறுதியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்.﴾* *(2:256)*

இவ்வசனத்தின் மூலம் இஸ்லாத்தின் கொள்கை என்பது இவ்விருவிடயங்களின் மீதே அமைந்துள்ளது. இவ்விரண்டில் ஏதாவதொன்றில் தவறு விட்டாலும் அது நிராகரிப்பாகவே கருதப்படும். அதில் எவ்வித விட்டுக்கொடுப்பும் கிடையாது.

அல்லாஹு தஆலா திருமறையில் யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் பகிரங்கமாக நிராகரிப்பாளர்கள் எனக் குறிப்பிட்டுள்ளான். எனவே இதற்குப் பிறகு எவரும் இவர்களைப் பயந்தோ, அல்லது திருப்த்திப்படுத்தவோ, இவர்கள் விடயத்தில் சந்தேகித்தால், அல்லது கொள்கையை சரிகாண முற்பட்டால் அவர்களும் இஸ்லாத்தை விட்டும்

வெளியேற்றும் காரியமொன்றை புரிந்துவிட்டனர். அல்லாஹு தஆலா திருமறையில்:

﴿ فَتَرَى ٱلَّذِينَ فِي قُلُوبِهِم مَّرَضٌ يُسَٰرِعُونَ فِيهِمْ يَقُولُونَ نَخْشَىٰٓ أَن تُصِيبَنَا دَآئِرَةٌ فَعَسَى ٱللَّهُ أَن يَأْتِىَ بِٱلْفَتْحِ أَوْ أَمْرٍ مِّنْ عِندِهِۦ فَيُصْبِحُوا۟ عَلَىٰ مَآ أَسَرُّوا۟ فِىٓ أَنفُسِهِمْ نَٰدِمِينَ ﴿٥٢﴾ ﴾

*﴿எனவே (நபியே!) எவர் இருதயங்களில் நோய் இருக்கின்றதோ, அத்தகையவர்தாம் அவர்களிடம் விரைந்து செல்வதை நீர் காண்பீர். (அவர்களைப் பகைத்துக் கொண்டால்) "எங்களுக்கு ஏதாவது துன்பச்சுழல் ஏற்படுமோ என்று அஞ்சுகிறோம்" என அவர்கள் கூறுகிறார்கள் அல்லாஹ் (தான் நாடியபடி) தன்னிடமிருந்து (உங்களுக்கு) ஒரு வெற்றியையோ அல்லது ஏதாவது ஒரு (நற்) காரியத்தையோ கொடுத்து விடலாம். அப்பொழுது அவர்கள் தம் உள்ளங்களில் மறைத்து வைத்திருந்ததைப் பற்றி கைசேதமடைந்தோராக ஆகிவிடுவார்கள்.﴾* (5:52)

ஏனெனில் சமகாலத்தில் சிலர் தாம் முஸ்லீம்கள் என முத்திரை குத்திக்கொண்டாலும் அவர்கள் யூத, கிறிஸ்தவர்களை காபிர்கள் எனக் கூறுவது அவர்களுக்குத் தாங்கமுடியாத பெரும் சுமையாகத் தெரிகிறது. எனவேதான் இன்று அவர்கள் நாம்

**எல்லோரும் அல்லாஹ்வால் அருளப்பட்ட ஏதோவொரு மார்க்கத்தையே பின்பற்றுகிறோம் எனவே யாரும் யாரையும் நிராகரிப்பாளர்களெனக் கூறமுடியாது, அவ்வாறு கூறுவது தீவிரவாதம், இனவாதம், மதவாதம், மக்களிடையே பிளவையும், மனஉடை வையுமே தோற்றுவிக்கும் என்றெல்லாம் நியாயம் கூறகின்றனர்.**

**உண்மையில் மதசுதந்திரம், எம்மதமும் சம்மதம், நெகிழும் தன்மை எனும் கோஷங்க ளெல்லாம் நாத்திக, நிராகரிப்புக் கொள்கையாகும். மக்களை மார்க்கமற்ற நாத்திகர்களாக மாற்று வதற்காகவேண்டி இவ்வாறான மகுடத்தில் தோற்றமளிக்கிறது.**

**வல்ல நாயன் திருமறையில் இப்ராஹீம் நபியின் நிலைப்பாட்டை எமக்கு முன்மாதிரியாகக் குறிப்பிட்டுள்ளான்.**

**அல்லாஹு தஆலா திருமறையில் கூறும்போது:**

﴿ قَدْ كَانَتْ لَكُمْ أُسْوَةٌ حَسَنَةٌ فِيٓ إِبْرَٰهِيمَ وَٱلَّذِينَ مَعَهُۥٓ إِذْ قَالُواْ لِقَوْمِهِمْ إِنَّا بُرَءَٰٓؤُاْ مِنكُمْ وَمِمَّا تَعْبُدُونَ مِن دُونِ ٱللَّهِ كَفَرْنَا بِكُمْ وَبَدَا بَيْنَنَا وَبَيْنَكُمُ ٱلْعَدَٰوَةُ وَٱلْبَغْضَآءُ أَبَدًا حَتَّىٰ تُؤْمِنُواْ بِٱللَّهِ وَحْدَهُۥٓ ﴿٤﴾ ﴾

***﴿ இப்றாஹீமிடமும், அவரோடு இருந்தவர்களிடமும், நிச்சயமாக உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது, தம் சமூகத்தாரிடம் அவர்கள், "உங்களை விட்டும், இன்னும்***

*அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகிறவற்றைவிட்டும், நாங்கள் நிச்சயமாக நீங்கிக் கொண்டோம் உங்களையும் நாங்கள் நிராகரித்து விட்டோம், அன்றியும் ஏகனான அல்லாஹ் ஒருவன் மீதே நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரை, நமக்கும் உங்களுக்குமிடையில் பகைமையும், வெறுப்பும் நிரந்தரமாக ஏற்பட்டு விட்டன"என்றார்கள்.﴿* **(60:4)**

**இதுவே அல்லாஹ் பின்பற்றுமாறு ஏவும் இப்றாஹீம் عليه السلام அவர்கள் போதித்த மார்க்கமும், வழியுமாகும். இது பற்றி திருமறை:**

﴿ وَمَن يَرْغَبُ عَن مِّلَّةِ إِبْرَٰهِـۧمَ إِلَّا مَن سَفِهَ نَفْسَهُۥ ۚ وَلَقَدِ ٱصْطَفَيْنَٰهُ فِى ٱلدُّنْيَا ۖ وَإِنَّهُۥ فِى ٱلْـَٔاخِرَةِ لَمِنَ ٱلصَّٰلِحِينَ ﴿١٣٠﴾ ﴾

*﴾இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பவன் யார்?– தன்னைத் தானே தாழ்த்திக் கொள்பவனைத் தவிர. நிச்சயமாக நாம் அவரை(த் தூய்மையாளராக) இவ்வுலகில் தேர்ந்தெடுத்தோம். நிச்சயமாக அவர் மறுமையில் நல்லடியார் கூட்டத்திலேயே இருப்பார்.﴿* **(2:130)**

**அபூமாலிக் அல் அஷ்ஜஈ رضي الله عنه அவர்கள் ரஸூல் ﷺ அவர்கள் கூறக் கேட்டதாக அறிவிக்கும் செய்தியில்:**

““யார் வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லையென்று கூறி,அவன் அன்றி வணங்கப்படுபவற்றை நிராகரிக்கிறாரோ அவர் உயிரும்,உடமையும் மற்றவர் மீது ஹராமாகிவிடுகிறது. பின் அவர் கணக்கு அல்லாஹ்வின் பொறுப்பாகும்.””
(முஸ்லிம்)

சுருங்கக் கூறின் அல்லாஹ்வை நிராகரிப்போர் இரு வகையினர்.

1- அடிப்படையிலே காபிராக இருப்பவர்கள். உதாரணமாக யூதர்கள், கிறத்தவாகள், பௌதர்களைக் குறிப்பிடலாம். இவர்களைப் பொறுத்தவரைக்கும் காபிர்கள் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடம் கிடையாது. யார் இவர்களின் குப்ரில் ஐயப்படுகின்றனரோ, அல்லது இவர்கள் கொள்கையை சரிகாண் கின்றனரோ அவர்களும் இஸ்லாத்தை விட்ட வர்களாகவே கருதப்படுகின்றனர்.

2- முஸ்லிமாக இருந்து பின் ஏதோ காரணத்தால் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள்.

இவ்வகையினரைப் பொறுத்தவரைக்கும் இவர்கள் எக்காரணத்தினால் இறைநிராகரிப்புக்குச் சென்றனரோ அது தெளிவானதாகவும், நம்பகமான அறிஞர்களால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்களாக இருத்தல்வேண்டும்.உதரணமாக ரஸூல் ﷺ அவர்களை நையாண்டி செய்வது, அல்லது ஏசுவது,

அல்லது மார்க்கத்தில் பிரபலமான ஒன்றை மறுப்பது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இப்படிப்பட்டோர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறுவது பின் வரும் இருவிடயங்களின் அடிப்படையில் அமையும்.

1- அவர் செய்த, அக்காரியம் பற்றிய தெளிவில்லாமல் அது மார்க்கத்திலிருந்து வெளியேற்றும் காரியமல்ல என உறுதிகொள்ளல்.

இவரைப்பொறுத்தவரைக்கும் இவ்விடயம் பற்றிய தெளிவைக் பெற்றதன் பின்னால் மீண்டும் மறுத்தாலே தவிர அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவராகக் கருதப்படமாட்டார்.

2- தான் புரிந்த காரியம் இஸ்லாத்தைப் போக்கும் எனத் தெரிந்திருந்தும் அவர் கருதும் சில நியாயங்களின் அடிப்படையில், அது பெரும் தவறாக இருந்தாலும் நிராகரிப்புக்கு இட்டுச்-செல்லாது என எண்ணுதல். இந்நிலையிலும் இவர் நிராகரிப்புக்குச் சென்றுவிட்டாரென கூறமுடியாது.

## 4- ரசூல் ﷺ அவர்கள் வழிகாட்டலை விட பிறரின் வழிகாட்டல் சிறந்ததெனவும்,அவர்கள் தீர்ப்பை விட வேறொருவரின் தீர்ப்பு தரமானது எனவும் கருதுவது.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரைக்கும் எப்போதும் அவன் முன் ரஸூல் ﷺ அவர்களின் சொல்லும்,செயலும், அங்கீகாரமும் வாழ்க்கையின் சகல துறைகளிலும் முன்மாதிரியாகத் திகழவேண்டும். அதுவே அவன் ஏற்றிருக்கும் ஷஹாதத்தின் சுவையாகும். வெறும் வார்த்தையால் மாத்திரம் தான் ஒரு முஸ்லிமெனக் காட்டிக்கொள்வதற்காக முஹம்மத் ﷺ அவர்களை இறைத்தூதராக ஏற்றிருக்கிறேன் எனக் கூறிவிட்டு, பின் அவர்களின் வழிகாட்டல்களில், போதனைகளில், சட்டங்களில் குறைகாண்பது, அல்லது சந்தேகிப்பது அவரது ஈமானின் நம்பகமற்ற தன்மையையே எடுத்துக்காட்டக்கூடியதாகவுள்ளது.

ரஸூல் ﷺ அவர்கள் பற்றி ஒரு செய்தி கிடைத்தால் அதை நாம் முழுமனதுடன் ஏற்கவேண்டும். இன்று முஸ்லீம்களுக்கு மத்தியில் இஸ்லாத்தைப் பற்றிய போதிய தெளிவின்மையின் காரணமாக தீய சக்திகளால் கிளப்பப்படும் அனைத்து சந்தேகங்களையும் உள்வாங்குபவர்களாக மாறிவிட்டார்கள்.

முந்தைய முஸ்லீம்களிடத்திலிருந்த இஸ்லாத்தில் அசைக்கமுடியாத உறுதி, அதைப் பின்பற்றும் பேராசை, அதன் செய்திகளில் அசைக்கமுடியாத நம்பிக்கை ஆகியவை இன்றுள்ள முஸ்லீம்களிடத்தில்

இல்லை. இத்தனைக்கும் மத்தியில் இன்றுதான் இஸ்லாத்தின் உண்மை நிலை, ரஸூல் ﷺ அவர்களின் கூற்றுக்களின் ஆழமான உண்மைத் தன்மை ஆகியவை நாளாந்த அறிவு, ஆராய்ச்சிக்கு ஒத்துப்போவதால் நிரூபிக்கப்பட்டவண்ணமிருக்கிறது.

அல் குர்ஆன் எப்படி வஹியோ அவ்வாறே நபி வழியும் வஹியாகும் என்பதைப் புரிந்திடவேண்டும். இது பற்றி திருமறை இவ்வாறு கூறுகிறது.

﴿ وَمَا يَنطِقُ عَنِ ٱلْهَوَىٰٓ ۝٣ إِنْ هُوَ إِلَّا وَحْىٌ يُوحَىٰ ۝٤ ﴾

*﴾ அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை., அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை. ﴿*

**(53:4)**

ஜாபிர் ؓ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் கூறும் போது:

« أمّا بعدُ فإنّ خيرَ الحديثِ كتابُ اللهِ وخيرَ الهدى هدى محمّدٍ وشرَّ الأمورِ محدثاتُها وكلُّ بدعةٍ ضلالةٌ ». (رواه مسلم)

““பேச்சில் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும்,வழிகாட்டலில் சிறந்தது முஹம்மத் ﷺஅவர்களின் வழிகாட்டலாகும்.காரியங்களில் மகா கெட்டது மார்கத்தில் புதிதாக ஏற்படுத்தபபட்ட வையாகும்,புதிதாக ஏற்படுத்தபட்டவை அனைத்தும் நரகிலாகும்.”” எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (முஸ்லிம்)

**மேலும் மிக்தாத் பின் மஃதீ கரிப் ﵁ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் குறிப்பிடும் போது:**

**عَنِ الْمِقْدَامِ بْنِ مَعْدِيكَرِبَ عَنْ رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم- أَنَّهُ قَالَ « أَلاَ إِنِّى أُوتِيتُ الْكِتَابَ وَمِثْلَهُ مَعَهُ........** (رواه أبوداؤد)

""தெரிந்து கொள்ளுங்கள் நான் அல்குர்ஆனையும், அதனுடன் அதே போல் ஒன்றையும் வழங்கப்பட்டிருக்கின்றேன்."" (அபூதாவூத்)

**எனவே நபி ﷺ மார்க்கமாகக் கூறும் அனைத்துமே தன் இஷ்டப்படி பேசுவதில்லை அல்குர்ஆனைப் போன்றே தன் பேச்சும் அருளப்பட்ட ஒன்று என்பதைத் மிகத் தெள்ளத்தெளிவாக இந்த ஹதீதில் குறிப்பிடுகின்றார்கள்.**

**எனவே அல்குர்ஆன், அல் ஹதீதில் வரும் சட்டங்கள், தீர்ப்புக்கள் அனைத்துக்கும் ஒரு விசுவாசி உளப்பூர்வமாகக் கட்டுப்படுவது அவசியமாகும். மாறாக எவர்கள் இதை உதறித்தள்ளி விட்டு யூதக் கிறிஸ்தவர்களின் குப்பபைக் கலாச்சாரத்தையும், நாகரீகத் தையும், அவர்களால் இயற்றப்படும் சட்டங்களையும் சர கண்டு, இம் மார்க்கத்தைக் குறை காண முற்படுகின்றனரோ அவர்கள் தம் ஈமானை மீண்டும் ஒரு முறை சரிசெய்யட்டும்.**

எனவே ஒரு விசுவாசி தன் அனைத்து விவகாரங்களிலும் அல்குர்ஆன், அஸ்ஸு ன்னாவின் சட்டங்களையே தேடி அமுல்படுத்துவதில் தயங்கக்கூடாது. அல்குர்ஆனில் வல்ல அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.:

﴿ إِنِ ٱلْحُكْمُ إِلَّا لِلَّهِ ﴿٥٧﴾ ﴾

*﴿ தீர்ப்புக் கூறும் உரிமை அல்லாஹ்வுக்கே உரியது. ﴾* (6:57)

இதற்கு மாற்றமாக செயற்படுவோரைப் பற்றிக் குறிப்பிடும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

﴿ أَلَمْ تَرَ إِلَى ٱلَّذِينَ يَزْعُمُونَ أَنَّهُمْ ءَامَنُوا۟ بِمَآ أُنزِلَ إِلَيْكَ وَمَآ أُنزِلَ مِن قَبْلِكَ
يُرِيدُونَ أَن يَتَحَاكَمُوٓا۟ إِلَى ٱلطَّٰغُوتِ وَقَدْ أُمِرُوٓا۟ أَن يَكْفُرُوا۟ بِهِۦ وَيُرِيدُ
ٱلشَّيْطَٰنُ أَن يُضِلَّهُمْ ضَلَٰلًۢا بَعِيدًا ﴿٦٠﴾ ﴾

*﴿(நபியே!) உம்மீது இறக்கப்பட்ட இ(வ் வேதத்)தையும், உமக்கு முன்னால் இறக்கப்பட்ட (வேதங்கள் அனைத்)தையும் நம்புவதாக வாதித்துக் கொண்டிருப்போரை நீர் பார்க்கவில்லையா? (எந்த ஷைத்தானை) நிராகரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறதோ அந்த ஷைத்தானைத் தீர்ப்புக் கூறுபவனாக ஏற்றுக் கொள்ள*

*வேண்டுமென விரும்புகிறார்கள் அந்த ஷைத்தானோ அவர்களை வெகு தூரமான வழிகேட்டில் தள்ளிவிட விரும்புகிறான்.﴿* **(4:60)**

**மேலும் ரஸூல் ﷺ அவர்களுக்கு அருளப்பட்டதை விட்டுவிட்டு வேறு எவரிடத்திலும் தீர்ப்புக் கோருவதும், ஈமானும் ஒரு போதும் சேராது என்பதை பின் வரும் வசனம் விளக்குகிறது.:**

﴿ فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا
يَجِدُوا فِي أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ﴿٦٥﴾ ﴾

*﴾உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்.﴿* **(4:65)**

**எவர்கள் மார்க்கச் சட்டங்களை கைவிட்டு மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களை சரகண்டு அமுலாக் கின்றனரோ அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள் என பின் வரும் வசனம் கூறுகிறது.**

﴿ وَمَن لَّمْ يَحْكُم بِمَا أَنزَلَ اللَّهُ فَأُولَٰئِكَ هُمُ الْكَافِرُونَ ﴿٤٤﴾ ﴾

*﴾ எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ,அவர்கள் நிச்சயமாக காஃபிர்கள்தாம். ﴿* (5:44)

**அல்லாஹ்வின் தீர்ப்பும், சட்டமுமே சந்தேகமின்றி மனித சமூகத்திற்கு பொருத்தமானது,அவனே சட்டம் இயற்றும் அதிகாரமுள்ளவன், அவனுக்கே மக்களை விட அவர்களுக்கு எவ்விதிகள் அவர்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமானவை எனும் அறிவுள்ளது, எது எப்போது எப்படி நிகழ்ந்தது, நிகழப்போவது, நிகழ்ந்தால் எப்படி நிகழும் என்பன பற்றிய அறிவும் அவனுக்கே உரியதாகும்.**

## 5- ரஸூல் ﷺ அவர்கள் போதித்த மார்க்கத்தை யாரேனும் வெறுத்து நடந்தால், அவன் அதன் படி செயல்பட்டாலும் காபிராகி விடுவான்.

**ரஸூல் ﷺ அவர்கள் போதித்தவற்றில் சட்டரீதியான,அவர்களின் வழிகாட்டல் ரீதியான ஏதேனும் ஒன்றை மனதால் வெறுப்புற்ற நிலையில் நோக்குவது,அல்லது கசப்புடன் பார்ப்பது போன்றவை ஒரு மனிதனை காபிராக்கும் செயல் மாத்திரமன்றி, நரகின் கடைசித் தட்டில் இருக்கும் நயவஞ்சகர்களின் செயலாகவும் உள்ளது.**

**உதாரணமாக குற்றவியலைப் பொறுத்தவரைக்கும் களவு, மது, கொலைக்கான தண்டனை,மேலும்**

**பலதாரத் திருமணம், சாட்சி விடயத்தில் இரு ஆண்களுக்கு ஒரு பெண் எனும் முறை, வட்டி, ஹிஜாப், போன்றவற்றை வெறுப்பதைக் குறிப்பிடலாம்.**

**அல்லாஹு தஆலா திருமறையில் குறிப்பிடும்போது:**

﴿ وَٱلَّذِينَ كَفَرُوا۟ فَتَعْسًا لَّهُمْ وَأَضَلَّ أَعْمَـٰلَهُمْ ﴿٨﴾ ذَٰلِكَ بِأَنَّهُمْ كَرِهُوا۟ مَآ أَنزَلَ ٱللَّهُ فَأَحْبَطَ أَعْمَـٰلَهُمْ ﴿٩﴾ ﴾

*﴾அன்றியும், எவர்கள் நிராகரிக்கின்றார்களோ, அவர்களுக்குக் கேடுதான் அவர்களுடைய செயல்களை அவன் பயனற்றவையாகவும் ஆக்கிவிடுவான்.*

*ஏனெனில் அல்லாஹ் இறக்கிய (வேதத்)தை, திட்டமாகவே அவர்கள் வெறுத்தார்கள் ஆகவே, அவர்களுடைய செயல்களை அவன் பயனற்றவையாக ஆக்கிவிட்டான்.﴿ (47:8,9)*

**இவ்வசனத்தில் அல்லாஹ் மார்க்கமாக்கியதை வெறுத்ததற்காக அல்லாஹ் அவர்களை நிராகரிப்பாளர்கள் எனக் குறிப்பிடுகிறான். எனவேதான் முஃமீன்கள் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் பிறப்பித்த கட்டளைகளுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என, அவர்களை அடையாளப் படுத்தும்போது பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.**

﴿ فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّىٰ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا ﴿٦٥﴾ ﴾

﴿உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள். ﴾ (4:65)

மற்றுமோரிடத்தில்:

﴿ وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ ۗ وَمَن يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُّبِينًا ﴿٣٦﴾ ﴾

﴿மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை

ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.﴾ (33:36)

## 6- ரசூல் ﷺ அவர்களின் சுன்னாவில், வழிகாட்டலில், தீர்ப்பில் ஏதேனும் ஒன்றை கேலிசெய்தலும், கொச்சைப்படுத்தலும், அவமதித்தலும்.

**இது பற்றி திருமறை இவ்வாறு விளக்குகிறது.:**

﴿ وَلَئِن سَأَلْتَهُمْ لَيَقُولُنَّ إِنَّمَا كُنَّا نَخُوضُ وَنَلْعَبُ ۚ قُلْ أَبِاللَّهِ وَآيَاتِهِ
وَرَسُولِهِ كُنتُمْ تَسْتَهْزِئُونَ ﴿٦٥﴾ ﴾

﴿(இதைப்பற்றி) நீர் அவர்களைக் கேட்டால், அவர்கள், “நாங்கள் வெறுமனே விவாதித்துக் கொண்டும், விளையாடிக்கொண்டும்தான் இருந்தோம்” என்று நிச்சயமாகக் கூறுவார்கள். “அல்லாஹ்வையும், அவன் வசனங்களையும், அவன் தூதரையுமா நீங்கள் பரிகசித்துக் கொண்டு இருந்தீர்கள்?” என்று (நபியே!) நீர் கேட்பீராக. ﴾ (9:65)

﴿ لَا تَعْتَذِرُوا قَدْ كَفَرْتُم بَعْدَ إِيمَانِكُمْ ۚ ﴿٦٦﴾ ﴾

*சமாளிக்க வேண்டாம், நீங்கள் ஈமான் கொண்டபின் நிச்சயமாக நிராகரிப்போராய் விட்டீர்கள்.. ﴾* (9:66)

**அல்லாஹ் அவன் வசனங்களை கேலியாகக் கொண்டோரை கடும் தண்டனையைக் கொண்டு எச்சரித்துள்ளான்.**

**இதையே பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகின்றது.**

﴿ وَإِذَا عَلِمَ مِنْ ءَايَٰتِنَا شَيْـًٔا ٱتَّخَذَهَا هُزُوًا ۚ أُو۟لَٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِينٌ ﴿٩﴾ ﴾

*﴿ நம் வசனங்களிலிருந்து ஏதாவது ஒன்றை அவன் அறிந்து கொண்டால், அதைப் பரிகாசமாக எடுத்துக் கொள்கிறான் அ(த்தகைய)வர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு. ﴾* (45:9)

**இழிவு தரும் வேதனையை நிராகரிப்பாளர்கள், முஷ்ரிகீன்கள் விடயத்திலேயே அல் குர்ஆனில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.**

**“வசனங்கள்” எனும் போது அது சான்றுகள், ஆதாரங்கள், ஏவல், விலக்கல்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.**

**இப்னு ஹஸ்ம் அவர்கள் தனது "அல் பஸ்ல்" எனும் நூலில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்கள்.**

***"தெளிவான சான்றின் அடிப்படையில் எவர்கள் அல்லாஹுதஆலாவையோ, அவனுடைய வானவர்களில் ஒருவரையோ, நபிமார்களில் ஒருவரையோ, அல்லது அல்குர்ஆன் வசனத்தில் ஒன்றையோ, அல்லது கடமைகளில் ஒன்றையோ தெளிவு கிடைத்ததின் பின்பும் கேலிசெய்தால் அவர்கள் நிராகரிப்பாளர்களே. ஏனெனில் இவை அனைத்துமே அல்லாஹ்வின் வசனங்களாகும்."***

**இஸ்லாத்தில் எதையேனும் வேணுமென்றோ, விளையாட்டுக்கோ பரிகாசம் செய்வது நிராகரிப்புக்கு இட்டுச்செல்லும் என்பதைத் தெரியவேண்டும். எம்மில் சிலர் தன் நாவைத் கட்டுப்பாடற்று விட்டுவிடுவதால் மார்க்க விடயங்கள் கூட அவர்கள் பேச்சில் மாட்டிக்கொள்கின்றன. தாம் மெய்யாகப் பேசுவதில்லை யென்று நியாயம் கூறினாலும் பின் வரும் வசனத்தின் அடிப்படையில் இப்படிப்பட்டவர்களும் மார்க்கத்தை விட்டும் வெளியேறும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.**

**மேற் கூறப்பட்ட வசனம் அருளப்பட்ட காரணத்தை நாம் தெரிந்து கொண்டால் மேலும் இவ்விடயம் தெளிவாகும்.**

அதாவது, அப்துல்லா பின் உமர் ﷺ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் தபூக் போரின்போது ஒரு மனிதர் சபையொன்றில் நபித்தோழர்களைப் பற்றி பின்வருமாறு கூறினார். — "நமது இந்தக் காரிகளை (நபித்தோழர்களை) ப்போன்று சாப்பாட்டுப் பிரியர்களாகவும், மகாபொய்யர்களாகவும், எதிரிகளுக்கு முன் கோழைகளாகவும் இருப்பதைப் போன்று வேறு எவர்களையும் நான் காணவில்லையெனக் கூறினார். - இதை செவியுற்ற மற்றுமொருவர் "இல்லை நீயே பொய்யன், நீ ஒரு நயவஞ்சகன் நிச்சயமாக இச்செய்தியை நான் ரஸூல் ﷺ அவர்களிடம் எடுத்துச்செல்வேன் என்று எழுந்து செல்வதற்கிடையில் இது பற்றிய தகவலும், தீர்ப்பும் நபியவர்களுக்கு வஹீ மூலம் தெரிவிக்கப் பட்டுவிட்டது.

அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் கூறுகிறார்கள்: "நான் அம் மனிதரைக் கண்டேன் அவரோ ரஸூல் ﷺ அவர்களின் ஒட்டகத்தின் இடுப்புப் பட்டியைப் பிடித்துக்கொண்டு அல்லாஹ்வின் தூதரே! வேடிக்கையாகவும், விளையாட்டாகவுமே பேசினோம் எனக்கூற, ரஸூல் ﷺ அவர்களோ பின் வரும் வசனத்தை ஓதிக்காட்டினார்கள்."

*﴿(இதைப்பற்றி) நீர் அவர்களைக் கேட்டால், அவர்கள், "நாங்கள் வெறுமனே விவாதித்துக் கொண்டும், விளையாடிக்கொண்டும்தான் இருந்தோம்" என்று நிச்சயமாகக் கூறுவார்கள். "அல்லாஹ்வையும், அவன் வசனங்களையும்,*

*அவன் தூதரையுமா நீங்கள் பரிகசித்துக் கொண்டு இருந்தீர்கள்?" என்று (நபியே!) நீர் கேட்பீராக.*

*நியாயம் கூற வேண்டாம், நீங்கள் ஈமான் கொண்டபின் நிச்சயமாக நிராகரிப்போராய் விட்டீர்கள், நாம் உங்களில் ஒரு கூட்டத்தாரை மன்னித்தபோதிலும், மற்றொரு கூட்டத்தாரை அவர்கள் குற்றவாளிகளாகவே இருப்பதால் நாம் வேதனை செய்வோம்.* ﴿ **(9:65,66)**

**மார்க்கத்தைப் பரிகாசம் செய்வது நயவஞ்சகர்கள், நிராகரிப்போரின் தன்மையாகும். திருமறையில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.**

﴿ وَإِذَا رَأَوْكَ إِن يَتَّخِذُونَكَ إِلَّا هُزُوًا أَهَٰذَا ٱلَّذِى بَعَثَ ٱللَّهُ رَسُولًا ﴿٤١﴾ إِن كَادَ لَيُضِلُّنَا عَنْ ءَالِهَتِنَا لَوْلَآ أَن صَبَرْنَا عَلَيْهَا ۚ وَسَوْفَ يَعْلَمُونَ حِينَ يَرَوْنَ ٱلْعَذَابَ مَنْ أَضَلُّ سَبِيلًا ﴿٤٢﴾ ﴾

*﴾இவரைத்தானா அல்லாஹ் தூதராக அனுப்பி -யிருக்கிறான் (என்று கூறி) உம்மை அவர்கள் காணும் பொழுது உம்மைக் கேலிக்குரியவராக அவர்கள் கருதுகின்றனர்.*

*நாம் (நம் தெய்வங்களின் மீது) உறுதியாக இல்லாதிருந்தால், நம்முடைய தெய்வங்களை விட்டும் திருப்பி நம்மை இவர் வழி கெடுத்தேயிருப்பார் (என்றும் அவர்கள் கூறுகின்றனர். (மறுமையின்) வேதனையை அவர்கள் காணும்பொழுது, பாதையால் மிக வழிகெட்டவர்கள் யார் என்பதை நன்கறிந்து கொள்வார்கள்.* ﴾ (25:41,42)

**மேலும் தொழுகைக்காக அவர்களுக்கு அழைப்புவிடுத்தால் அவர்கள் அதையும் கேலியாகவே நோக்குகின்றனர். திருமறையில் பின்வரும் வசனம் இவ்வாறு கூறுகிறது.**

﴿ وَإِذَا نَادَيْتُمْ إِلَى ٱلصَّلَوٰةِ ٱتَّخَذُوهَا هُزُوًا وَلَعِبًا ۚ ذَٰلِكَ بِأَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْقِلُونَ ﴿٥٨﴾ ﴾

﴿*தொழுகைக்காக அழைப்புவிடுக்கும் போது அதை அவர்கள் கேலியாகவும், விளையாட்டாகவும் எடுத்துக்கொள்வார்கள். அதற்குக் காரணம் அவர்கள் அதைப்பற்றித் தெரியாதவர்கள்.* ﴾ (5:58)

**மார்க்கத்தை கேலிசெய்வதன் விபரீதத்தை உணர்த்தவே வல்ல நாயன் திருமறையில் கேலிசெய்வோரோடு உட்காரவும் வேண்டாம் என எச்சரிக்கின்றான். இது பற்றிக் குறிப்பிடும் போது :**

﴿ وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِي ٱلْكِتَٰبِ أَنْ إِذَا سَمِعْتُمْ ءَايَٰتِ ٱللَّهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَأُ بِهَا فَلَا تَقْعُدُوا۟ مَعَهُمْ حَتَّىٰ يَخُوضُوا۟ فِي حَدِيثٍ غَيْرِهِۦٓ ۚ إِنَّكُمْ إِذًا مِّثْلُهُمْ ۗ إِنَّ ٱللَّهَ جَامِعُ ٱلْمُنَٰفِقِينَ وَٱلْكَٰفِرِينَ فِي جَهَنَّمَ جَمِيعًا ﴿١٤٠﴾ ﴾

*﴿(மு∴மின்களே!)அல்லாஹ்வின் வசனங்கள் (சிலரால்) நிராகரிக்கப்படுவதையும், பரிகசிக்கப்படுவதையும் நீங்கள் கேட்டால், அவர்கள் இதைவிட்டு வேறு விஷயத்தில் ஈடுபடும் வரையில் அவர்களோடு நீங்கள் உட்கார வேண்டாம்' என்று வேதத்தின் மூலம் அவன் உங்கள் மீது (கட்டளை) இறக்கியுள்ளான். அவ்வாறு உட்கார்ந்தால் நீங்களும் அவர்களைப் போன்றவர்களே. நிச்சயமாக அல்லாஹ் நயவஞ்சகர்களையும், கா∴பிர்களையும் எல்லாம் நரகத்தில் ஒன்றாகச் சேர்த்துவிடுவான். ﴾* (4:140)

மேற் கண்ட வசனங்களூடாக நாம் விளங்குவது யாதெனில் மார்கத்தைப் பரிகாசம் செய்வது நிராகரிப்பாளர்களின் செயலெனவும், யார் மார்க்கத்தில் எதையேனும் மெய்யாகவோ, விளையாட்டாகவோ கேலிசெய்தால் அவர் காபிராகிவிடுவாரெனவும் தெளிவாகிறது..

## ரஸூல் ﷺ அவர்களை ஏசுதல்.

ரஸூல் ﷺ அவர்களை ஏசுதல், தூற்றுதல் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் செயலாகும். இவ்விடயம் இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமென இமாம் இஸ்ஹாக் பின் ராஹ்வியா, இப்னு அப்துல் ஃபர், அல் காழி இயால், இப்னு தைமிய்யா ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

இமாம் அல் ஃகத்தாபி அவர்கள் குறிப்பிடும் போது முஹம்மத் ﷺ அவர்களை ஏசுபவனுக்கு மரண தண்டனையே மார்க்கத்தீர்ப்பென்பதில் இரண்டாம் கருத்துக்கிடமில்லையெனக் குறிப்பிட்டுள்ளர்கள்.

மேலும் ரஸூல் ﷺ அவர்களை ஏசிய அபூலஹபை கண்டித்து மறுமை வரைக்கும் அவன் சாபத்தையும், நாசத்தையும் அகிலத்துக்கு எடுத்துரைக்கும் அத்தியாயம் ஒன்றை அல்லாஹ் அருளியுள்ளான். அதுவே லஹப் அத்தியாயமாகும்.

## 7- சூனியம்!.. சூனியம் செய்பவரும், அதை செய்ய வேண்டுபவரும் இறை நிராகரிப்புக்குச் சென்றுவிடுகின்றனர்.

இது பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும் போது:

﴿ وَمَا يُعَلِّمَانِ مِنْ أَحَدٍ حَتَّىٰ يَقُولَآ إِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ ﴾

*﴿ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும் "நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம் (இதைக் கற்று) நீங்கள் நிராகரிக்கும் கா∴பிர்கள் ஆகிவிடாதீர்கள்" என்று சொல்லி எச்சரிக்காத வரையில், எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுக்கவில்லை,﴾* (2:102)

எனவே சூனியத்தைக் கற்பதும் அதில் ஈடுபடுவதும் நிராகரிப்புக்கு இட்டுச்செல்லக்கூடியது என்பதை இவ்வசனம் கூறுகிறது.

சூனியம் என்பது, மந்திரிக்கும் வார்த்தைகள், எழுத்துக்கள், இஸ்ம்கள், மோசமான அர்த்தங்களைக் தாங்கிநிற்கும் இலக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு கெட்ட ஷைத்தான்களைக் கவர்ந்து, வணங்கி அவர்கள் மூலம் நோய் நொடிகளை மற்றவர்களுக்கு ஏற்படுத்துவதாகும். எனினும் அல்லாஹ்வின் நாட்டமின்றி எவருக்கும் எவ்வித தீங்கையும் யாராலும் ஏற்படுத்த முடியாது.

திருமறையில் வல்ல நாயன் சூனியம்பற்றிய வசனத்தின் தொடரில் இது பற்றிக் குறிப்பிடும் போது :

﴿وَمَا هُم بِضَآرِّينَ بِهِۦ مِنْ أَحَدٍ إِلَّا بِإِذْنِ ٱللَّهِۚ﴾

*﴿எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும்எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது.﴾*
(2:102)

இவ்வசனத்திற்கேற்ப இறைவனின் மீது ஆழமான, அசைக்கமுடியாத நம்பிக்கையுடையோர் இவ்வாறான கெட்ட ஜின்களின் தீங்கிலிருந்தும், விளையாடல் களிலிருந்தும் பாதுகாக்கப் படுகின்றனர்.

சூனியத்தை மேற்கொள்வோர் பெரும்பாலும் கெட்ட ஜின்களை வணங்கி, அவர்களுக்காக அறுத்துப் பலியிட்டு அவர்களை நெருங்காமல் இச்சூனியத்தை அடையமுடியாது. எனவேதான் ரஸூல் ﷺ அவர்கள் நாசமாக்கும் பெரும் பாவங்களைக் குறிப்பிடும் போது இணைவைப்போடு சேர்த்து சூனியத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اجْتَنِبُوا السَّبْعَ الْمُوبِقَاتِ قَالُوا يَا رَسُولَ اللَّهِ وَمَا هُنَّ قَالَ الشِّرْكُ بِاللَّهِ وَالسِّحْرُ..(مسلم)

அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் நாசமாக்கும் பெரும் பாவங்களைத்

தவிர்ந்துகொள்ளுங்கள்। என கூறியபோது அங்கிருந்தவர்கள் அவை யாவை?என வினவினார்கள். அதற்கு பதிலளித்த ரஸூல் ﷺ அவர்கள் முதலில் இணைவைத்தலையும், அதையடுத்து **சூனியத்தையுமே** குறிப்பிட்டார்கள். **(முஸ்லிம்)**

**ஷைத்தானிய செயலான சூனியத்தை நம்புவோர் ஒரு போதும் சுவனம் செல்லமாட்டார்கள். அபூ மூஸா ﷺ அவர்கள் அறிவுப்புச் செய்யும் செய்தியில் ரஸூல் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்.**

عن أبي موسى ﷺ أن النبي ﷺ قال : « ثلاثة لا يدخلون الجنة : مدمن الخمر ، وقاطع الرحم ، ومصدق بالسحر . (رواه أحمد وابن حبان)

❴ மூன்று சாரார் சுவனத்தை அடைய மாட்டார்கள். மதுவில் திளைத்தவன், குடும்ப உறவை துண்டித்து வாழ்பவன், சூனியத்தை நம்புபவன். ❵ **(அஹ்மத், இப்னு ஹிப்பான்)**

## சூனியத்தில் இணை வைத்தல் இரண்டு விதத்தில் சம்பந்தப்படுகின்றது.

- **சூனியக்காரர்கள் தங்கள் நோக்கத்தை அடைவதற்காக கெட்ட ஷைத்தான்களைக் கொண்டு உதவிதேடுவதும் ,அவர்களுக்கு அல்லாஹ்வுக்கு செய்யவேண்டிய வணக்கத்தை செலுத்துவதுமாகும்.**

**பொதுவாகவே சூனியம் ஷைத்தான்களின் வழியால் வந்ததை அல்குர்ஆன் பின்வருமாறு உறுதிப் படுத்துகிறது:**

وَمَا كَفَرَ سُلَيْمَـٰنُ وَلَـٰكِنَّ ٱلشَّيَـٰطِينَ كَفَرُوا۟ يُعَلِّمُونَ ٱلنَّاسَ ٱلسِّحْرَ

﴿ சுலைமான் அவர்கள் நிராகரிக்கவில்லை எனினும் ஷைத்தான்களே நிராகரித்துவிட்டனர். அவர்கள் மக்களுக்கு சூனியத்தைக் கற்றுக் கொடுக்கின்றனர். ﴾ (1–102)

- **அல்லாஹ் தன்வசம் வைத்துள்ள மறைவான அறிவும், ஞானமும் தனக்கும் உண்டென வாதிடல்.**

**வல்ல நாயன் திருமறையில் :**

﴿ قُل لَّا يَعْلَمُ مَن فِي ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ ٱلْغَيْبَ إِلَّا ٱللَّهُ ۚ وَمَا يَشْعُرُونَ أَيَّانَ يُبْعَثُونَ ﴿٦٥﴾ ﴾

***﴿வானம், பூமியில் அல்லாஹ்வைத் தவிர மறைவானவற்றை வேறு எவரும் அறியமாட்டார்கள், எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதையும் உணரமாட்டார்கள் ﴾*** *(16:21)*

**சூனியத்தைப் பொறுத்தவரைக்கும் அடிப்படையில் நோக்கும் போது அது ஒரு நிராகரிப்பாகவும், இணைவைப்பாகவுமே காணப்படுகிறது. சில வேளைகளில் இது தவிர உள்ள சில வகைகளும் காணப்படுகின்றன.**

இந்த வகையில் சூனியத்தை இரு வகைப்படுத்தலாம்.

1- முற்றிலும் இணைவைப்பையும், நிராகரிப்பையும் சார்ந்தது.

அதாவது மற்றவர்களுக்கு நோய், நொடியை ஏற்படுத்துவதற்காக கெட்ட ஷைத்தான்களின் உதவி வேண்டி, அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய வணக்க முறைகளான ஸுஜூது செய்தல், அறுத்துப்பலியிடல், போன்றவற்றை அவர்களுக்கு செலுத்தி நோக்கத்தை அடைதல்.

2- பல ரக மூலிகைகள், மருந்துகள் மூலமாக பாதிப்பை ஏற்படுத்தல்.

## சூனியக்காரன் பற்றிய மார்க்கத்தீர்ப்பு.

சூனியக்காரர்கள் விடயத்தில் இரு வகையான கருத்துக்கள் அறிஞர்களுக்கு மத்தியில் நிலவுகின்றன. அதாவது ஏற்கனவே நாம் காட்டிய அல்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் பொதுவாகவே சூனியத்தில் ஈடுபடுவோர் காபிர்களே என்பதாகும். இக்கருத்தே அனேகமான அறிஞர்களின் கருத்துமாகும்.

மறுசாரார் சூனியத்தின் இரு வகைகளில் முதல் தர வகையைச் சார்ந்தவற்றில் ஈடுபடுவோரே மார்க்கத்தை விட்டும் வெளியேறுவோர் எனக் கருதுகின்றனர்.

எனினும் மனிதனை நாசமாக்கும் கொடிய பாவங்களின் பட்டியலின் இணைவைப்புடன் சேர்த்துக் சூனியமும் கூறப்பட்டுள்ளதைக் கவனத்திற்கொள்ளவேண்டும்.

## சூனியக்காரனுக்குரிய தண்டனை.

இவ்வுலகத் தண்டனையைப் பொறுத்த வரைக்கும் அவன் செய்யும் சூனியத்தின் வகை தெளிவான குப்ரைச் சார்ந்ததாக இருந்தால் அவன் முர்தத் என்பதற்காகவும், அப்படியில்லையெனில் குற்றத்திற்கான தண்டனைக்காகவும் மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

இதே தீர்ப்பையே அனேகமான நபித்தோழர்கள் வழங்கியுள்ளனர்.

அஹ்மத், அபூதாவூத், பைஹகி ஆகிய கிரந்தங்களில் இடம்பெற்றுள்ள செய்தியில் ப∴ஜாலாஹ் பின் அப்தா∴ அறிவிக்கிறார்கள்:

““கலீபா∴ உமர் அவர்கள் அனுப்பிய கடிதத்தில் சூனியம் செய்யும் ஆண்,பெண் ஒவ்வொருவரையும் கொல்லுமாறு கட்டளையிட்டார்கள்.நாங்கள் மூன்று சூனியக்காரிகளைக் கொண்றோம் என பஜாலாஹ் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.””

இமாம் அஹ்மத் அவர்கள் கூறுகையில் சூனியக்காரனைக் கொல்வது பற்றிய செய்தி மூன்று ஸஹாபாக்கள் வழியாக உறிதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்கள்.

## சூனியத்தை அகற்றுதல்.

இவ்விடயத்தைப்பொறுத்தவரைக்கும் மக்கள் இன்று சூனியத்தை அகற்ற முதலில் நாடுவது சூனியக் காரர்களையே, கஷ்டத்தைப்போக்கும் வல்லமையைக் கொண்டுள்ள வல்ல நாயனை மறந்துவிடுகின்றனர். அல்லாஹு தஆலா திருமறையில், தானே துன்பம் போக்கும் வல்லமையுடையவன் என்றும், அவனையே நாடுமாறும், அவனின் மீதே பூரண நம்பிக்கை வைக்குமாறும் முஃமீன்களுக்கு கட்டளையிடுகின்றான்.

﴿ وَإِن يَمْسَسْكَ ٱللَّهُ بِضُرٍّ فَلَا كَاشِفَ لَهُۥٓ إِلَّا هُوَ ۖ وَإِن يَمْسَسْكَ بِخَيْرٍ فَهُوَ عَلَىٰ كُلِّ شَىْءٍ قَدِيرٌ ﴿١٧﴾ ﴾ الأنعام

*﴿ (நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவதொரு துன்பத்தை ஏற்படுத்திவிட்டால் அவனைத் தவிர (வேறு யாரும்) அதை நீக்க முடியாது. இன்னும் அவன் ஒரு நன்மையை உண்டாக்கிவிட்டால், (அதை எவரும் தடுக்க முடியாது.) அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான். ﴾* (6:17)

சூனியத்தால் தாக்கப்பட்ட ஒருவர் கூடியவரை அதைக் கண்டுபிடித்து, செயலிழக்கச்செய்தல் சாலச்சிறந்தது. ரஸூல் ﷺ அவர்கள் வஹீமூலம் அறிவிக்கப்பட்டதும் அவ்வாறே கண்டுபிடித்து செயலிழக்கச்செய்தார்கள்.

அல்லது மார்க்கம் கூறும் முறைகளைப் பேணி, பரிகாரம் தேடுவதாகும். அல்குர்ஆனிலும், அல் ஹதீதிலும் நிறைய பிரார்த்தனைகளும், அவ்ராதுகளும் சூனியத்திலிருந்து விடுபட வந்துள்ளதால் அவற்றையே கடைப்பிடிக்க வேண்டும்.

மாறாக இவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு சூனியக்காரர் களிடமே சென்று மீண்டும் சூனியத்தால் பரிகாரம் தேடுவது தன்னைத் தானே நாசத்தில் தள்ளும் செயலாகும். ஏனெனில் அவர்கள் கெட்ட ஷைத்தான்களைக் கொண்டே அவற்றை செய்ய முயல்கின்றனர். இதனால் நாம் அல்லாஹ்வுக்கு இணைவைக்கும் செயலுக்குக் காரணமாகிறோம்.

## 8- முஸ்லீம்களுக்கு எதிராக எதிரிகளுக்கு உதவி,ஒத்துழைப்பு வழங்குவது.

வல்ல நாயன் திருமறையில்:

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تَتَّخِذُواْ ٱلْيَهُودَ وَٱلنَّصَٰرَىٰٓ أَوْلِيَآءَ ۘ بَعْضُهُمْ أَوْلِيَآءُ بَعْضٍ ۚ وَمَن يَتَوَلَّهُم مِّنكُمْ
فَإِنَّهُۥ مِنْهُمْ ۗ إِنَّ ٱللَّهَ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلظَّٰلِمِينَ ﴿٥١﴾ ﴾

*﴿ மு..மின்களே! யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் உங்களுடைய பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். (உங்களுக்கு விரோதம் செய்வதில்) அவர்கள் தம்மில் சிலர் சிலருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். உங்களில் எவரேனும் அவர்களைப் பாதுகாவலர்களாக ஆக்கினால் நிச்சயமாக அவரும்*

*அவர்களைச் சேர்ந்தவர்தான். நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்.* ﴾ (5:51)

**எவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக காபிர்களின் அணியில் இணைந்து அவர்களுக்கு எதிராக செயற்படுகின்றனரோ அவர்கள் அல்லாஹ்வின் கடும் எச்சரிக்கைக்கும், கோபத்திற்கும், தண்டனைக்கும் இலக்காகுவதுடன், அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முஸ்லீம்களுக்கும் சதிசெய்தவர்களா கவும் கருதப்படுவர்.**

**இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு வர்ணிக்கிறது.**

﴿ تَرَىٰ كَثِيرًا مِّنْهُمْ يَتَوَلَّوْنَ ٱلَّذِينَ كَفَرُوا۟ ۚ لَبِئْسَ مَا قَدَّمَتْ لَهُمْ أَنفُسُهُمْ أَن سَخِطَ ٱللَّهُ عَلَيْهِمْ وَفِى ٱلْعَذَابِ هُمْ خَـٰلِدُونَ ﴿٨٠﴾ وَلَوْ كَانُوا۟ يُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلنَّبِىِّ وَمَآ أُنزِلَ إِلَيْهِ مَا ٱتَّخَذُوهُمْ أَوْلِيَآءَ وَلَـٰكِنَّ كَثِيرًا مِّنْهُمْ فَـٰسِقُونَ ﴿٨١﴾ ﴾

﴿ *(நபியே!) அவர்களில் அநேகர் கா:பிர்களையே உற்ற நண்பர்களாகக் கொண்டிருப்பதை நீர் காண்பீர். அவர்கள் தமக்காக முற்கூட்டியே அனுப்பிவைத்தது நிச்சயமாக கெட்டதேயாகும். ஏனெனில் அல்லாஹ்வின் கோபம் அவர்கள் மீதுள்ளது. மேலும் வேதனையில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.*

*அவர்கள் அல்லாஹ்வின் மீதும் நபியின் மீதும், அவர் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தார்களானால், அவர்கள், கா∴பிர்களைத் (தங்களின்) உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொண்டிருக்கமாட்டார்கள். ஆனால் அவர்களில் அநேகர் பாவிகளாகவே இருக்கின்றனர். ﴾* (5: 80,81)

**இன்று முஸ்லிம்களனெப் பெயர் சூட்டிக்கொண்ட எத்தனையோ தலைமைகள் தங்களுடைய சுய இலாபங்களுக்காக இஸ்லாமிய உம்மத்தின் நலன்களையும், இருப்பையும், உரிமைகளையும் எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து அதில் சுயலாபம் தேடும் நிகழ்வுகளை நாம் அவதானிக்கிறோம். நாலுக்கு நாள் முஸ்லிம்களின் உதிரங்கள் ஓட்டப்பட்ட வன்னமிருக்க இன்னும் இவர்கள் அவர்களின் நண்பர்களாகவே காணப்படுவது கசப்பான உண்மையாகும்.**

**பின்வரும் திருமறை வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கிறான்.**

﴿ فَتَرَى ٱلَّذِينَ فِى قُلُوبِهِم مَّرَضٌ يُسَٰرِعُونَ فِيهِمْ يَقُولُونَ نَخْشَىٰٓ أَن تُصِيبَنَا دَآئِرَةٌ ۚ فَعَسَى ٱللَّهُ
أَن يَأْتِىَ بِٱلْفَتْحِ أَوْ أَمْرٍ مِّنْ عِندِهِۦ فَيُصْبِحُوا۟ عَلَىٰ مَآ أَسَرُّوا۟ فِىٓ أَنفُسِهِمْ نَٰدِمِينَ ﴿٥٢﴾ ﴾

﴾ எனவே (நபியே!) எவர் இருதயங்களில் நோய் இருக்கின்றதோ, அத்தகையவர்தாம் அவர்களிடம் விரைந்து செல்வதை நீர் காண்பீர். (அவர்களைப் பகைத்துக் கொண்டால்) எங்களுக்கு ஏதாவது துன்பச்சுழல் ஏற்படுமோ என்று அஞ்சுகிறோம் என அவர்கள் கூறுகிறார்கள் அல்லாஹ் (தான் நாடியபடி) தன்னிடமிருந்து (உங்களுக்கு) ஒரு வெற்றியையோ அல்லது ஏதாவது ஒரு (நற்) காரியத்தையோ கொடுத்து விடலாம். அப்பொழுது அவர்கள் தம் உள்ளங்களில் மறைத்து வைத்திருந்ததைப் பற்றி கைசேதமடைந்தோராக ஆகிவிடுவார்கள். ﴿ (5:52)

**மேலும் இத்தன்மையானது நயவஞ்சகர்களின் தன்மையாகும். அல்லாஹு தஆலா திருமறையில் இதுபற்றிக் கூறும்போது:**

﴾ بَشِّرِ ٱلْمُنَٰفِقِينَ بِأَنَّ لَهُمْ عَذَابًا أَلِيمًا ﴿١٣٨﴾ ٱلَّذِينَ يَتَّخِذُونَ ٱلْكَٰفِرِينَ أَوْلِيَآءَ مِن دُونِ ٱلْمُؤْمِنِينَ ۚ أَيَبْتَغُونَ عِندَهُمُ ٱلْعِزَّةَ فَإِنَّ ٱلْعِزَّةَ لِلَّهِ جَمِيعًا ﴿١٣٩﴾ ﴿

﴾ (நபியே! இத்தகைய) நயவஞ்சகர்களுக்கு நிச்சயமாக நோவினை தரும் வேதனை உண்டு என்று நன்மாராயங் கூறுவீராக!

*இவர்கள் மு:ஃமின்களை விட்டும் கா:ஃபிர்களை (தங்களுக்குரிய) உற்றநண்பர்களாக எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களிடையே இவர்கள் கண்ணியத்தை தேடுகிறார்களா? நிச்சயமாக கண்ணியமெல்லாம் அல்லாஹ்வுக்கே உரியது.*﴿ **(4:138-39)**

**பிரிதொரு இடத்தில் இப்படிப்பட்டவர்கள் "ரித்தத்"துக்குச் சென்றுவிட்டனர் எனக் குறிப்பிடுகின்றான்.**

﴾ إِنَّ ٱلَّذِينَ ٱرْتَدُّوا۟ عَلَىٰٓ أَدْبَـٰرِهِم مِّنۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ ٱلْهُدَى ۙ ٱلشَّيْطَـٰنُ سَوَّلَ لَهُمْ
وَأَمْلَىٰ لَهُمْ ﴿٢٥﴾ ذَٰلِكَ بِأَنَّهُمْ قَالُوا۟ لِلَّذِينَ كَرِهُوا۟ مَا نَزَّلَ ٱللَّهُ سَنُطِيعُكُمْ
فِى بَعْضِ ٱلْأَمْرِ ۖ وَٱللَّهُ يَعْلَمُ إِسْرَارَهُمْ ﴿٢٦﴾ ﴿

*﴾நிச்சயமாக, எவர்கள் நேர்வழி இன்னதென்று அவர்களுக்குத் தெளிவானபின், புறம்காட்டித் திரும்பிக் கொண்டு போகிறார்களோ, (அவ்வாறு போவதை) ஷைத்தான் அழகாக்கி, (அவர்களுடைய தவறான எண்ணங்களையும்) அவர்களுக்குப் பெருக்கி விட்டான்.*

*இது ஏனெனில் அவர்கள் எதை அல்லாஹ் இறக்கி வைக்கிறானோ, அதை வெறுப்பவர்களிடம், "நாங்கள் சில காரியங்களில் உங்களையே பின்பற்றி நடப்போம்" என்று கூறியதனாலேயாம். ஆனால், அல்லாஹ் அவர்களுடைய*

*இரகசியங்களை அறிகிறான்)* (47:26,25)

9~ யார் ரஸூல் ﷺ அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை விட்டு விலகிச் சென்று தனி வழியைக் கடைப்பிடிக்க அவர்களின் உம்மத்தினரில் சிலருக்கு அதிகாரம் உண்டென நம்புகின்றனரோ அவர்கள் காபிராகி விடுகின்றனர்.

அதாவது மார்க்கத்தில் தன் இஷ்டப்படி வேண்டியதை செய்வதற்கான சலுகையும், அதிகாரமும் சிலருக்கு உண்டென நம்புதல்.

*இவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களில் ஒன்று.*

எவ்வாறு மூஸா عليه السلام அவர்களின் மார்க்கத்துக்கு கிழ்ர் عليه السلام முரன்பட்டபோதும் அவர்கள்தடுக்கப் படவில்லையோ அவ்வாறே இந்த உம்மத்திலும் சிலருக்கு முடியும்.

இக் கோட்பாட்டை விமர்சிப்பதற்கு முன்னால் இக்கருத்தின் தோற்றுவாய் எதுவென நோக்கினால் ஸூபியாக்கள், பாதினிய்யாக்களில் அளவுகடந்து சென்றோரே இதன் போதகர்களாகக் காணப்படுகின்றனர்.

அதாவது மார்க்கத்துக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத சில பயிற்சிகளை மேற்கொண்டதன் பின், தாம் சாதாரண நிலையிலிருந்து ஒரு உன்னத

நிலையை அடைவதாகக் கருதி அதன்பின் மார்க்க ஏவல்,விலக்கல்கள் தமக்குத் தேவையில்லையெனவும், மார்க்கத்தின் வரையறைகளைத் தாண்டி, வேண்டியதைச் செய்யும் உரிமையை எட்டிவிட்டதாகவும், மார்க்க சட்ட திட்டங்கள் இந் நிலையை எட்டாதவர்களுக்கே என எண்ணி தன்னையும், சமூகத்தையும் நாசத்தில் தள்ளிக்கொண்டிருக்கின்றனர்.

இமாம் அபுல் அப்பாஸ் அல் ஹர்ரானீ (ரஹ்) அவர்கள் இவர்கள் இது பற்றிக் குறிப்பிடுகையில்:

இவர்கள் கூறும் ஆதாரங்களில் ஒன்றுதான் அல்குர்ஆனில் இடம் பெற்றுள்ள வசனமான " நபியே நீர் உமக்கு உறுதி வரும் வரைக்கும் வணங்குவீராக" எனக் கூறும் வசனமாகும். (15:99)

இவ்வசனத்தில் "உறுதி" என்பதற்கு இவர்களில் சிலர் அறிவும்,ஞானமும் என்றும், அது வந்துவிட்டால் வணக்கம் தேவையில்லை எனவும்.இன்னும் சிலர் அது ஒரு ஸூபித்துவ நிலை என்றும் அதன் பின் வணங்கத்தேவையில்லையெனவும் நினைக்கின்றனர். உண்மையில் இது பகிரங்க குப்ரைத் தவிர வேறொன்றில்லை.

இவர்கள் ஆதாரமாகக் கொள்ளும் இவ்வசனம் இவர்களுக்கு பாதகமானதே தவிர அதில் இவர்களின் இத்திய சிந்தனைக்கு எவ்வித இடமும் கிடையாது.

ஹசனுல் பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகையில்:

“அல்லாஹு தஆலா ஒரு விசுவாசியின் வணக்கத்தின் கடைசி எல்லையை மரணத்தைத் தவிர வேறொன்றையும் வைக்கவில்லை. அல்லாஹு தஆலா திருமறையில் குறிப்பிடும் போது:

“நபியே உமக்கு உறுதி வரும் வரை வணங்குவீராக” எனக்குறிப்பிடுகிறான். அதாவது இங்கு உறுதி எனக்குறிப்பிடப்படுவது இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த கருத்துப்படி மரணத்தையே குறிக்கின்றது மாறாக இவ்வசனத்தை ஸூபிகள் விளங்கியது போல ஞானம் பிறக்கும் வரையே என்றும், பின் வணங்கவேண்டியதில்லையெனவும் நினைப்பது இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த முடிவின் படி நிராகரிப்பாகும். (மஜ்மூஃ பதாவா)

பிரிதொரு இடத்தில் அவர்கள் கூறும் போது :

“இப்படி, தங்களுக்கு நினைத்தது மார்க்கம் என்றும், பிறருக்கு இறைவனின் மார்க்கம் என்றும் அல் குர்ஆன், அல் ஹதீதின் வழிகாட்டலிலிருந்து தூரமாகி யோரின் நிலை இறுதியில் பகுத்தறிவை இழந்த துற்பாக்கிய வான்களாகவும், இன்னும் சிலர் இறையச்சம் உள்ளத்திலிருந்து பறிக்கப்பட்டும், இன்னும் சிலர் ஈமானை இழந்த முர்தத்களாகவும், நயவஞ்சகர்களாகவும், சாபத்துக்குள்ளான காபிராகவுமே காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட பெரும் எண்ணிக்கையானோர் வரலாற்றில்

இடம்பெற்றுள்ளனர். இவர்கள் முன்வைக்கும் முதல் தர ஆதாரம் மூஸா, கிழ்ர் ஆகியோரின் சம்பவமாகும்."

(மஜ்மூஃ பதாவா)

இவ்விருவருக்கும் இடையில் நடந்த சம்பவத்தை அல்குர்ஆனில் கஹ்ப்ஃ அத்தியாயம் 65-78 வரையுள்ள வசனங்கள் குறிப்பிடுகின்றன.

இச்சம்பவத்தில் இவர்கள் கூறும் ஆதாரம் இருவிதமாக அமைந்துள்ளது.

1– கிழ்ர் ﷺ அவர்கள் இறைவனின் நாட்டத்தையும், விதியையும், ஏற்பாட்டையும், நேரடியாக விளங்குபவராக இருந்தார்கள். அவ்வாறான நிலையை எட்டியவர்கள் விரும்பியதை செய்யமுடியும்,ஏவல், விலக்கல் என்பது அவர்களுக்குக் கிடையாது. எனவேதான் கிழ்ர் ﷺ மார்க்கத்துக்கு முரன்பட்ட போதிலும் அவர்கள் கண்டிக்கப்படவில்லை. எனக்கூறுகின்றனர்.

இக்கூற்றைப்பொறுத்தவரைக்கும் அறிஞர்கள் இதைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். இச்சமூகத்தின் நெருப்பு வணங்கிகள் என ரஸூல் ﷺ அவர்களால் கூறப்பட்டோரை விடவும் கேவலமானவர்கள் என இவர்களை விமர்சிக்கிறார்கள்.

உண்மையில் கிழ்ர் عليه السلام அவர்கள், இவர்கள் கற்பனை செய்வது போன்று இருந்திருந்தால் மூஸா عليه السلام அவர்களிடத்தில் தன் செயல்களுக்கு இறுதியில் நியாயம் கூறும்போது, சுருக்கமாக இவர்கள் கற்பனை

செய்யும் பதிலையே கூறி முடித்திருப்பார்கள். மாறாக அவர்கள் மார்க்கம் அனுமதிக்கும் காரணங்களின் அடிப்படை யிலேயே தன் தன்செயல்களைச் செய்ததாகக் கூறியிருப்பது இவர்களின் வீணான இக் கற்பனைகள் உண்மைக்குப் புறம்பானது எனத் தெளிவுபடுத்துகிறது.

௨ இறைநேசர்கள் மார்க்கத்தையோ,நபி ﷺ அவர்களையோ பின்பற்றவேண்டிய அவசியம் கிடையாது, அவர்கள் தன்னிச்சையாக செயற்படும் தகுதியை தம் மெய்ஞானத்தாலும், பக்திப்பரவசத்தாலும் அடைந்து விட்டதால் தமக்கு நினைத்தது மார்க்கம் என்றும், மக்களுக்கு இறைவனின் மார்க்கம் என்றும் இவர்கள் நினைக்கின்றனர். இவர்களில் சிலர் இறைநேசர்களை இறை தூதர்களை விடவும் மதிக்கின்றனர்.இதற்கும் கிழ்ர், மூஸா عليه السلام ஆகியோரின் சம்பவமே முன்மாதிரியாகக் கொள்கின்றனர்.

இப்போது நாம் இக்கருத்தை அல்குர்ஆனின் நிழலில் ஆராய முற்படுவோம். முதலில் ரஸூல் ﷺ அவர்கள் போதித்த மார்க்கத்தை எடுத்துக் கொண்டால் ஏற்கனவே தோன்றிய மார்க்கங்களைவிட முற்றிலும் மாறுபட்டு அது இறுதியானதும், அகில உலகமக்களுக்கு உரியதாகவும் விளங்குகிறது.

எனவே எவருக்கும் முஹம்மத் ﷺ அவர்களின் வருகையின் பின் அவர்களின் மார்க்கத்தை விட்டும் தன்னிச்சையாக செயல்படும் உரிமை முற்றாக நீக்கப்படுகிறது. கிழ்ர் மூஸாவுக்கு عليه السلام முரன்பட்டார் என்று ஒரு வாதத்துக்கு ஏற்றுக்கொண்டாலும், முஹம்மத் ﷺ அவர்களுக்குப் பின் அது நிராகரிக்கப்பட்டதாகும். இதன் தாத்பரியத்தை தெளிவுபடுத்துவதற்காகவே வல்ல நாயன் திருமறையில் முந்திய நபிமார்களாயினும் அவர்களும் இப்போது உயிரோடிருந்தால் முஹம்மத் ﷺ அவர்களையே பின்பற்றியாகவேண்டுமென பின் வரும் வசனத்தில் குறிப்பிடுகின்றான்

﴿ وَإِذْ أَخَذَ ٱللَّهُ مِيثَٰقَ ٱلنَّبِيِّۦنَ لَمَآ ءَاتَيْتُكُم مِّن كِتَٰبٍ وَحِكْمَةٍ ثُمَّ جَآءَكُمْ رَسُولٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمْ لَتُؤْمِنُنَّ بِهِۦ وَلَتَنصُرُنَّهُۥ ۚ قَالَ ءَأَقْرَرْتُمْ وَأَخَذْتُمْ عَلَىٰ ذَٰلِكُمْ إِصْرِى ۖ قَالُوٓا۟ أَقْرَرْنَا ۚ قَالَ فَٱشْهَدُوا۟ وَأَنَا۠ مَعَكُم مِّنَ ٱلشَّٰهِدِينَ ﴿٨١﴾ ﴾

*﴿(நினைவு கூறுங்கள்) நபிமார் (கள் மூலமாக அல்லாஹ் உங்கள் முன்னோர்) களிடம் உறுதிமொழி வாங்கியபோது, "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் (இறைதூதர்) வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக*

*உதவி செய்வீர்களாக" (எனக் கூறினான்). "நீங்கள் (இதை) உறுதிப்படுத்துகிறீர்களா?என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா"? என்றும் கேட்டான் "நாங்கள் (அதனை ஏற்று) உறுதிப்படுத்துகிறோம்" என்று கூறினார்கள் (அதற்கு அல்லாஹ்) "நீங்கள் சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் (ஒருவனாக) இருக்கிறேன்" என்று கூறினான்.* (3:81)

**இவ்வசனத்துக்கு விரிவுரை வழங்கும் ஹிப்ருல் உம்மாஃ இப்னு அப்பாஸ் ﵄ அவர்கள் குறிப்பிடும்போது:**

**எந்தவொரு இறைத்தூதரை அனுப்பும் போதும் அவரிடம் நீங்கள் உயிரோடிருக்கும் போது முஹம்மத் ﷺ அவர்கள் அனுப்பப்பட்டால் அவர்களையே பின்பற்றி, ஒத்தாசை வழங்க வேண்டுமெனவும், அவ்வாறே அவர்களின் சமூகத்தாருக்கும் கட்டளையிடுமாறும் உறுதிமொழியெடுக்காமல் எந்தவொரு தூதரையும் அனுப்புவதில்லை" எனக் குறிப்பிடுகிறார்கள்.** (தப்ஷீர்:இப்னுகதீர்)

முஸ்னத் அஹ்மதில் இடம்பெற்றுள்ள செய்தியில்:

“மூஸா ﷺ அவர்கள் உயிரோடிருந்தால் என்னையே பின்பற்றியாகவேண்டும் என”” ரஸூல் ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் ஈஸா عليه السلام அவர்கள் இவ்வுலகுக்குத் திரும்பிய பின்பு முஹம்மத் ﷺ அவர்களின் மார்க்கத்தையே பின்பற்றுவார்கள் என முஸ்னத் அஹ்மதில் தக்க ஆதாரங்கள் வந்துள்ளன. நபி ﷺ அவர்களை அடையும் ஏனைய நபிமார்களின் நிலையே இதுவென்றால் சாதாரணமானவர்களைப் பற்றிக் குறிப்பிடவேண்டிய தில்லை.

இன்னும் சொல்லப்போனால் கிழ்ர் மூஸா عليه السلام அவர்களைப் பின்பற்றுவதற்கு மூஸா عليه السلام அவர்கள், கிழ்ருக்கோ அல்லது அவர்களின் சமூகத்துக்கோ தூதராக வரவில்லை. ஏனெனில் மூஸா عليه السلام அவர்கள் பனூ இஸ்ரவேலர்களுக்கே தூதராக வந்தார்கள்.

எனவே கிழர் عليه السلام அவர்களுக்கு அவர்களைப் பின்பற்றுவது கடமையில்லை. புகாரி, முஸ்லிமில் இடம்பெற்றுள்ள செய்தியில் கிழ்ர் அவர்களே மூஸா عليه السلام அவர்களுக்கு:

....قَالَ يَا مُوسَى! إِنِّي عَلَى عِلْمٍ مِنْ عِلْمِ اللَّهِ عَلَّمَنِيهِ اللَّهُ لَا تَعْلَمُهُ وَأَنْتَ عَلَى عِلْمٍ مِنْ عِلْمِ اللَّهِ عَلَّمَكَهُ اللَّهُ لَا أَعْلَمُهُ......(متفق عليه)

““மூஸாவே நான் இறைவனிடமிருந்துவரும் அறிவின் பிரகாரமே செயற்படுகிறேன், உமக்கு அது தெரியாது.

அவ்வாறே நீரும் இறைவன் கற்றுத்தந்த இறைச்செய்தியின் பிரகாரம் செயற்படுகிறீர் அது எனக்குத் தெரியாது."" (புகாரிஹ3401)

**எனக் குறிப்பிடுவதிலிருந்து இருவருமே வெவ்வேறு தனித்தனி வஹியைப் பெறுபவர்களாக இருந்துள்ளதால் ஒருவர் மற்றவரைப் பின்பற்ற-வேண்டியதில்லை, எனவே கிழ்ர் (அலை) அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு மார்க்கம் இருக்கும் போது, மூஸா (அலை) அவர்களுக்கு தன் இஷ்டப்படி செயற்பட்டார் என்பதும் அற்றுப்போகிறது.**

**மேலும் மூஸா (அலை) அவர்களோ குறிப்பிட்ட ஒரு சமூகத்துக்கே இறைத்தூதராக வந்தவராவார்கள். ஆனால் ரஸூல் (ஸல்) அவர்கள் தன்னைப் பற்றி அறிமுகம் செய்யும்போது இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.**

**அதாவது தனக்கு விஷேடமாக அல்லாஹ் வழங்கியருளிய ஐம்பெரும் விடயங்களைக் குறிப்பிடும்போது:**

وعن جَابِرُ بْنُ عَبْدِ اللَّهِ أَنَّ النَّبِيَّ - صلى الله عليه وسلم - قَالَ « أُعْطِيتُ خَمْسًا لَمْ يُعْطَهُنَّ أَحَدٌ قَبْلِى ...وَكَانَ النَّبِىُّ يُبْعَثُ إِلَى قَوْمِهِ خَاصَّةً ، وَبُعِثْتُ إِلَى النَّاسِ عَامَّةً » «رواه البخاري»

ஒவ்வொரு இறைத்தூதர்களும் தன் சமூகத்துக்கு மாத்திரமே தூதராக வருவர். நானோ அகிலமக்கள் அனைவருக்கும் தூதராக வந்துள்ளேன். என்பதாகும். (புகாரி)

**மேலும் கிழ்ர் ﷺ அவர்களின் சம்பவத்தை உற்று நோக்கும் போது அங்கு யதார்த்தத்தில் அவர்கள் மூஸா ﷺ அவர்களின் மார்க்கத்திலிருந்து தன்னிச்சையாகச் செயற்பட்டு முரண்படவில்லை. எனவேதான் மூஸா ﷺ அவர்கள் பொறுமையிழந்த அவ்விடயங்களுக்கு தக்க காரணத்தைக் குறிப்பிட்ட போது மூஸா ﷺ அவர்கள் எவ்வித மறுப்புமின்றி மனதார ஏற்றுக்கொண்டார்கள்.**

**அதாவது மார்க்கத்தில் ஒருவிடயம் அனுமதிக்கப்பட்டதற்கான காரணத்தை உரிய தருணத்தில் புரிந்துகொள்வதில் ஒருவருக் கொருவர் வித்தியாசமுள்ளது.**

**உதாரணமாக இருவர் ஒரு வீட்டுக்குச் சென்று அவ்வீட்டில் உள்ளவற்றில் ஒருவர் சுதந்திரமாகச் செயற்படுகிறார், மற்றவர் வீட்டுக்காறரின் அனுமதிபெற்றே செயற்படவேண்டுமென நினைக் கிறார். முதலாமவர் சுதந்திரமாக செயற்படுவது வீட்டுக்காரர் பொருந்திக்கொள்வார் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையிலாகும், இரண்டாமவரிடம் அவ்வாறான நம்பிக்கையில்லை எனவே செயற்படமுடியவில்லை. இம்முறையானது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.**

இவ்வாறே கிழ்ர் அவர்கள் கப்பலை சேதப்படுத்திய சம்பவமும் காணப்படுகிறது. அதாவது கப்பலுக்குரியவர்கள் ஏழைகள் எனவே அநியாயக்கார அரசனின் அபகரிப்பிலிருந்து தக்கவைத்துக்கொள்ள வேறு வழியில்லாத போது ஓட்டையிட்டார்கள். இவ்விடயம் கிழ்ர் عليه السلام அவர்களுக்குத் தெரிந்தது, ஏனையோருக்குப் புரியவில்லை. கப்பல் சேதத்துடன் அவர்கள் கையில் இருப்பது, அநியாயகார அரசன் கைக்குச் செல்வதை விட மிக ஏற்றமானதாகும். இதற்கு ஒத்தசம்பவம்தான் ரஸூல் ﷺ அவர்கள் காலத்தில் சாகப்போகும் ஆட்டை உரியவர் அனுமதியின்றி ஒரு பெண்மணி அதிலிருந்து பயனடையும் நோக்கில் அறுத்துவிட்டார்கள். இது பற்றி நபியவர்களிடம் வினவியபோது உரியவர்களை உண்ணுமாறு அனுமதித்ததோடு அறுத்தபெண்ணுக்கு அறுத்ததற்காக எவ்வித தண்டனையும் விதிக்கவில்லை.

கிழ்ர் عليه السلام அவர்கள் சிறுவனைக் கொன்றவிடயமானது தன்மீது அத்துமீறுபவனைக் கொல்வதாக அமைந்துள்ளது. ஏனெனில் அவன் வாலிபத்தை அடைந்தால் தன் பெற்றோர்களின் ஈமானுக்குக்கூட அச்சுறுத்தலாகவும் அமைந்துவிடுவான் என்பது அவர்களுக்கு தெரிந்ததாலாகும்.

இதற்கு நிகராக இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் சிறுவர்களைக் கொல்வது பற்றி வினவியபோது கிழ்ருக்குத் தெரிந்தது போன்று உனக்கும் தெரிந்தால் செய் இல்லாவிட்டால் முடியாதென்றார்கள்.

அதேபோன்றே புகாரி முஸ்லிமில் இடம்பொற்றுள்ள செய்தியில் உமர் ﵁ அவர்கள் "இப்னுஸ் செய்யாத்" தஜ்ஜாலென்று எண்ணிக் கொல்ல முற்பட்டபோது ரஸூல் ﷺ அவர்கள் அவன் தஜ்ஜாலாக இருந்தால் அதற்குரியவர் நீயல்ல எனக் கூறினார்களே தவிர கொல்லமுற்பட்டதைக் கண்டிக்கவில்லை.

சுவரை நிறுத்தியதைப் பொறுத்தவரைக்கும் அவ்வூர் வாசிகள் நன்மக்களாக இருந்ததால், சன்மானமின்றி செய்ததைத் தவிர வேறதுவுமில்லை.

எனவே மேற்கண்ட ஆதாரங்களின் அடிப்படையில் கிழ்ர் அவர்கள் மூஸா ؑ அவர்களுக்கு ஒருபோதும் மாறுசெய்யவில்லை எனவும், மேலும் மூஸா ؑ அவர்களைப் பின்பற்ற வேண்டிய கடமையும் கிழ்ர் அவர்களுக்கில்லை எனவும் , கிழ்ர் அவர்களும் ஒரு நபியெனவும் தெளிவான சான்றுகளுடன் தெளிவுபடுத்துப்பட்டுள்ளது. எனவே கிழ்ர், மூஸா ؑ ஆகியோரின் சம்பவத்தை வைத்துக்கொண்டு மார்க்கத்தை பின்பற்றாமல் தன்னிச்சையாக செயற்படும் உரிமை இறைநேசர்களுக்குமுண்டு என வாதிடுவது எவ்வகையிலும் அல்லாஹ்வையும், மறுமையையும் பயப்படுகின்றவர்களுக்கு உகந்ததல்ல.

## 10– மார்க்கத்தைப் படிக்காமலும்,அதன் படி செயற்படாமலும் முற்றாகப் புறக்கணித்துப் புறந்தள்ளி நடத்தல்.

மார்க்கத்தைப் புறக்கணிப்பதைப் பொறுத்த-வரைக்கும் அதை இருவகைப்படுத்த முடியும்.

1– மார்க்கத்தை விட்டும் வெளியேற்றக்கூடியது.

அதாவது மார்க்கத்தை தெரியாமலும்,படிக்காமலும், செயற்படுத்தாமலும் முற்றாக புறக்கணித்தல். இவ்வகையைச் சார்ந்தோர் அவர்களிடத்தில் இஸ்லாத்தைத் தெரிவதற்கு எவ்வித நாட்டமோ இருக்காது,மேலும் இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் தன் நிலை பற்றிக் கடுகளவும் கவலைப்பட மாட்டார்கள். மாறாக தன்வழிகேட்டிலும், குப்ரிலும் தொடர்ந்து செல்வதையே தெரிவுசெய்வர்.

2– மார்க்கத்திலிருந்து வெளியேற்றாதது.

இவ்வகையைச் சார்ந்தோரைப் பொறுத்தவரைக்கும் இவர்கள் மார்க்கத்தை வேணுமென்று புறக்கணிக்காது, தங்களிடம் நேர்வழியைத் தேடவேண்டும், அதன் படி செயற்படவேண்டும் என்ற ஆசையிருந்தும் அதற்கு முடியாமற்போனவர்கள்.

அல்குர்ஆனில் நிறைய வசனங்கள் மார்க்கத்தைப் புறந்தள்ளுவதை எச்சரித்து வந்துள்ளன.

**வல்ல நாயன் திருமறையில் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றான்.**

﴿ وَمَنْ أَعْرَضَ عَن ذِكْرِى فَإِنَّ لَهُۥ مَعِيشَةً ضَنكًا وَنَحْشُرُهُۥ يَوْمَ ٱلْقِيَـٰمَةِ أَعْمَىٰ ﴿١٢٤﴾ ﴾ طه

*﴾ மேலும் எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறாரோ நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது,மேலும் மறுமை நாளில் நாம் அவனைக்குருடனாகவே எழுப்புவோம். ﴿* (20:124)

**பிரிதொரு இடத்தில்:**

﴿ وَمَنْ أَظْلَمُ مِمَّن ذُكِّرَ بِـَٔايَـٰتِ رَبِّهِۦ ثُمَّ أَعْرَضَ عَنْهَآ ۚ إِنَّا مِنَ ٱلْمُجْرِمِينَ مُنتَقِمُونَ ﴿٢٢﴾ ﴾

*﴾ எவன் தன்னுடைய இறைவனின் வசனங்களைக் கொண்டு நினைவு படுத்தப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணித்து விடுகிறானோ, அவனைவிட அநியாயக்காரன் எவன் (இருக்கிறான்)? நிச்சயமாக நாம் (இத்தகைய) குற்றவாளிகளை தண்டிப்போம். ﴿* (32:22)

**மேலும் கூறுகையில்:**

﴿ وَمَن يُعْرِضْ عَن ذِكْرِ رَبِّهِۦ يَسْلُكْهُ عَذَابًا صَعَدًا ﴿١٧﴾ ﴾

*﴾ ஆகவே எவன் தன் இறைவனை நினைப்பதைப் புறக்கணிக்கிறானோ, அவனைக் கொடிய வேதனையில் அவன் புகுத்தி விடுவான். ﴿* (72:17)

**மேலும் எவர்கள் முழுமையாக இறைவனைப் புறக்கணித்து வாழ்கின்றனரோ அவர்களுடன் ஷைத்தான் நெருக்கம் பெற்று இறுதியில் அவர்களின் பிரிக்கமுடியாத நண்பனாக மாறுகின்றான். பின் அவர்களுக்கு நற்செயல்கள் அனைத்தும் கசப்பானதாக மாற்றம் பொறுகின்றன. பின் இலகுவாக அவர்களை நாசத்தில் தள்ளிவிடுகின்றான்.**

**இப்படிப்பட்டவர்கள் பற்றியே பின்வரும் வசனம் சுட்டிக்காட்டுகிறது.**

﴿ وَمَن يَعْشُ عَن ذِكْرِ ٱلرَّحْمَٰنِ نُقَيِّضْ لَهُۥ شَيْطَٰنًا فَهُوَ لَهُۥ قَرِينٌ ﴿٣٦﴾ ﴾

*﴾ எவனொருவன் அர் ரஹ்மானின் நல்லுபதேசத்தை விட்டும் கண்ணை மூடிக் கொள்வானோ, அவனுக்கு நாம் ஒரு ஷைத்தானை ஏற்படுத்தி விடுகிறோம் அவன் இவனது நெருங்கிய நண்பனாகி விடுகிறான். ﴿* (43:36)

**மேலும் இவர்கள் இம்மை வாழ்வின் இன்பத்தில் மயங்கி அல்லாஹ்வைப் புறக்கணித்ததன் காரணமாக**

இவ்வகையினரை தோழமைகொள்ளாது புறக்கணித்துவிடுமாறு அல்குர்ஆன் மற்றவர்களை ஏவுகிறது.

﴿ فَأَعْرِضْ عَن مَّن تَوَلَّىٰ عَن ذِكْرِنَا وَلَمْ يُرِدْ إِلَّا ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا ﴿٢٩﴾ ﴾

*﴿ ஆகவே, எவன் நம்மை தியானிப்பதை விட்டும் பின வாங்கிக்கொண்டானோ இவ்வுலக வாழ்வையன்றி வேறெதையும் நாடவில்லையோ அவனை (நபியே!) நீர் புறக்கணித்து விடும். ﴾* (53:29)

இறுதியாக அறிஞர்களின் கருத்துக்கேற்ப மேற்கூறப்பட்ட அனைத்தும் மெய்யாகவோ, விளையாட்டாகவோ எவ்வடிப்படையில் நிகழ்ந்தாலும் அது ஒருமனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும் என்பதைக் காணமுடிகிறது. எனவே ஒவ்வாரு முஸ்லிமும் தனது இம்மை, மறுமை ஈடேற்றத்தின் ஆணிவேரான ஈமானின் தூய்மையைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளான், அதற்காக ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் பற்றிய தெளிவும் அவனிடம் இருக்க வேண்டிய தேவையும், அவசியமும் இங்கு உணரப்படுகிறது.

இஸ்லாத்தை உரியமுறையில் அதன் மூலாதாரங்களிலிருந்து கற்றுத் தெளிவுபெற்று நேர் வழியில் இறுதிவரைக்கும் பயணிக்க வல்ல நாயன் நம் அனைவருக்கும் துணை புரிவானாக.! ஆமீன்!!!

17-07-1429

# பொருளடக்கம்


| இல | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | |
| 2. | இஸ்லாத்தின் பின் இணைவைப்பால் ஏற்படும் விளைவுகள். | 09 |
| 3. | இணைவைத்தலின் வகைகள். | 12 |
| 4. | இணைவைப்பின் இரண்டாவது வகை. | 20 |
| 5. | இணைவைப்பில் பெரியதிலிருந்து சிறியது எதுவென பிரித்தறிய. | 20 |
| 6. | சிறிய இணைவைத்தலின் வகைகள். | 21 |
| 7. | இஸ்லாத்தை அழிப்பவை (2) | 30 |
| 8. | இஸ்லாத்தை அழிப்பவை (3) | 37 |
| 9. | இஸ்லாத்தை அழிப்பவை (4) | 44 |
| 10. | இஸ்லாத்தை அழிப்பவை (5) | 49 |
| 11. | இஸ்லாத்தை அழிப்பவை (6) | 52 |
| 12. | ரஸூல் ﷺ அவர்களை ஏசுதல். | 59 |
| 13. | இஸ்லாத்தை அழிப்பவை (7) | 60 |
| 14. | சூனியக்காரன் பற்றிய மார்க்கத்தீர்ப்பு. | 64 |
| 15. | சூனியக்காரனுக்குரிய தண்டனை. | 65 |
| 16. | சுனியத்தை அகற்றுதல். | 66 |
| 17. | இஸ்லாத்தை அழிப்பவை (8) | 67 |
| 18. | இஸ்லாத்தை அழிப்பவை (9) | 72 |
| 19. | இஸ்லாத்தை அழிப்பவை (10) | 84 |

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالدمام ، ١٤٣١هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالدمام

نواقض الإسلام - تامىل / المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالدمام - الدمام ، ١٤٣١ هـ

٩٦ ص ؛ ١٢ × ١٧ سم

ردمك : ٨-٢٩-٢-٨٠٤٢-٦٠٣-٩٧٨

١- الشرك بالله أ- العنوان

ديوي ٢٤٠ ١٤٣١/٣٩٥٩

رقم الايداع: ١٤٣١/٣٩٥٩

ردمك: ٨-٢٩-٢-٨٠٤٢-٦٠٣-٩٧٨